# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

செப்டம்பர் 2008 ஜீவியம் 14 மலர் 5

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சாவித்ரி | 2 |
| இம்மாதச் செய்தி | 4 |
| ஆன்மாவின் சக்தி பற்றிய விழிப்புணர்வு | 5 |
| லைப் டிவைன் | 8 |
| அன்பர் கடிதம் | 16 |
| என்னை எவரும் வணங்க வேண்டாம் | 17 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 20 |
| மனித முயற்சியின் புனித உருவம் | 22 |
| அஜெண்டா | 28 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 31 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 32 |
| லைப் டிவைன் - கருத்து | 35 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 37 |
| மலரும் மணமும் | 43 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 54 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

ஆன்மா நொடிப்பொழுதில் உணர்வதை அறிவு ஆராய்ச்சிக்குப் பின்னர்தான் உணர்கிறது.

நம் உணர்வு மையம் தோல்வியைச் சந்திக்கும் பொழுதுதான் உண்மையை உணர்கிறது.

ஆபத்திற்கு ஆளாகும் பொழுதுகூட நம்முடம்பு உண்மையை உணர்வது இல்லை.

அன்னை நம்முள் நுழைந்து நிரந்தரமாகத் தங்கிவிட்டார் என்று தெரிந்தால், அதன் பின் நாம் அழைப்பை நிறுத்தலாம்.

## P.88 This was a forefront of God's thousandfold house.
## ஆயிரம் மாடி அடுக்கு வீட்டின் முகப்பு இது.

✡ அரைகுறையாக திரையிடப்பட்ட கண்ணுக்குத் தெரியாத ஆரம்பம்.
✡ மினுமினுக்கும் மந்திர வாயில்.
✡ திரைமறைவிலுள்ள ஒளியின் நிழலின் பதட்டம்.
✡ புதிரான உலக அரங்கின் சந்தையில் ராஜ்ய சபை.
✡ அற்புதமான மாடியின் அழகான தோற்றம்.
✡ எல்லையற்றதின் மூலம் அறிய முடியாதது எட்டிப் பார்த்தது.
✡ காலத்தின் கதியின் ஓரத்தில் அது வந்து தங்கியது.
✡ காலத்தைச் சுருக்கிய க்ஷணத்தின் மூலம் எட்டிப் பார்த்தது.
✡ தெய்வங்கள் ஜனித்த இடத்தின் நிழல்.
✡ ரூபமற்றதின் ரூபமாக உடலற்றதின் உடல் எழுகிறது.
✡ அதன் நுதல் ஆத்மாவைக் கடந்த ஒளியாலானது.
✡ அறிய முடியாத அனந்தமான பிரம்மத்தின் ரூபங்கள்.
✡ சொற்பதம் கடந்ததின் கனவு அதன் நேத்திரம்.
✡ அதன் முகம் காலத்தைக் கடந்த பார்வையுடையது.
✡ பிரம்மாண்டமான பாதாளக் குகையை அவன் வாழ்வு அறியும்.
✡ புலனறியாத புறவெளியின் சிறு முகப்பு கட்டவிழ்கிறது.
✡ இடைவெளியின் இடை ஆடையை இழந்தது; இழந்தது கடந்தது.
✡ ஒளிப்பிழம்பு ஒருங்கிணைந்தெழுந்ததின் தழல்.



✡ பயங்கரப் பிரம்மாண்டம் பகுத்துணர்ந்ததை இங்கு கண்டோம்.
✡ அதன் விரியும் ஆடையின் விகசிதமான குஞ்சம்.
✡ அவை நம் ஜட வாழ்வின் சிறு வஸ்த்திரம்.
✡ புலப்படும் பிரபஞ்சம் தன் புதிரான ரூபங்களை மறைக்கிறது.
✡ அதன் இரகஸ்யங்கள் பரமாத்மஜோதியில் மறைந்தன.
✡ பிரகாசமான சட்டங்களின் எழுத்தைத் தெளிவாக எழுதினார்கள்.
✡ எண்ணத்தைக் கடந்த சூட்சுமச் சின்னத்தாலான வரைபடம்.
✡ மனத்தின் ஆழத்தில் வரையும் வரைபடம்.
✡ ஜடமான உலகின் பிம்பங்களை அது ஒளிவிடச் செய்தது.
✡ அதன் முக்கியமான மெருகின் அர்த்தமுள்ள அடையாளம்.
✡ அது தன் இதிகாச ஞானத்தை இலையிட்டது.
✡ அது பிரம்மத்தின் புதிரைப் பிரதிபலித்தது.
✡ வாழ்வின் இரு முனைகளிடையே அது எழுந்து உலவும்.
✡ அமைப்புடன் எழும் இராஜ்யத்தின் அர்த்தமுள்ள சட்டம்.
✡ அனந்தம் காலத்துள் குதித்தெழுந்தது.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மா சித்தித்த பின்னரே சரணாகதி ஆரம்பிக்கிறது. ஏனெனில் சரணாகதியைச் செய்ய வேண்டியது ஆன்மா. அதுவரை சமர்ப்பணத்தால் சரணாகதிக்கு நாம் நம்மைத் தயார் செய்துகொள்கிறோம்.

*சரணாகதி ஜீவன் முக்தனுக்குரியது.*

## இம்மாதச் செய்தி

வேகம்

அறியாமையின்

ஆர்ப்பாட்டம்.



# ஆன்மாவின் சக்தி பற்றிய விழிப்புணர்வு

**N.** அசோகன்

19-ஆம் நூற்றாண்டில் தென்அமெரிக்காவில் தங்கம் கிடைக்கிறதுஎன்று கேள்விப்பட்டு தன்னுடைய வீட்டையும், நிலத்தையும் விற்றுவிட்டு ஓர் ஏழை ஆப்பிரிக்கக் குடியானவன் தென்அமெரிக்காவிற்குச் சென்றான் என்றொரு கதை இருக்கிறது. அவனிடமிருந்து நிலத்தை வாங்கியவன் அந்நிலத்தை தோண்டிய பொழுது வைரக்கற்களைக் கண்டெடுத்தான். இந்தியா, ஆன்மீக வளம் நிறைந்தது. நம் நாட்டு ரிஷிகள் இறைவனை, சச்சிதானந்தமாகக் கண்டார்கள். சென்ற நூற்றாண்டில்தான் மேலைநாட்டு விஞ்ஞானிகள், இறுதியில் இருப்பது சக்திதான் (energy) என்று கண்டுபிடித்தார்கள். இதே உண்மையை நம்முடைய ரிஷிகள் உபநிடதக் காலத்திலேயே கண்டறிந்துவிட்டார்கள். அதோடு நிற்காமல் அதைத் தாண்டியும் சென்றார்கள். தாங்கள் கண்டறிந்த சக்தி (energy) என்பது அதற்கு முன்னிருக்கும் 'சத்', அதாவது இருப்பிலிருந்து (Existence) வருவதாக அறிந்தார்கள். இந்த 'சத்'தும் (Sat) இறுதியில்லைஎன்றும் அறிந்தார்கள். இந்த 'சத்'திற்கும் (Sat) பின்னால் பிரம்மம் இருக்கிறது. அது அளவற்றது, நிரந்தரமானது. அதுதான் இறுதியானது. அதிலிருந்துதான் 'சத்'தே வந்ததுஎன்று அறிந்தார்கள். இப்படிப்பட்ட அரிய ஆன்மீக உண்மைகளைக் கண்டறிந்த இந்நாடு ஏன் வறுமையில் வாடுகிறதுஎன்ற கேள்வி எழுகிறது. இயற்கை பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு சிறப்புகளை உருவாக்குகின்றது. இறுதிக் கட்டத்தில்தான் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து பூவுலக வாழ்க்கையை முற்றிலும் இறைமயமாக்குகிறது.

இந்தியா அடிமை நாடாக இருந்த வரையிலும் இந்நாட்டின் ஆன்மா மற்றும் அறிவுஎன்ற இரண்டுமே மங்கிப் போயிருந்தன.

ஆனால் இப்பொழுது இந்நாட்டின் ஆன்மா விடுதலை பெற்றுவிட்டது. ஆனால் இந்நாட்டின் வாழ்க்கை ஏழ்மையிலும் அறியாமையிலும் மூழ்கி இருக்கிறது. பாரதமாதாவின் அடிமைத்தளைகளை உடைத்து எறிவது எவ்வளவு அவசியமாக இருந்ததோ அதே அளவிற்கு இந்நாட்டைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஏழ்மைப் பிணியிலிருந்தும் இந்தியத் தாயை விடுவிப்பதும் அவசியமாகிறது. இந்தியா சிறப்பாக இருந்த காலத்தில் இந்நாட்டு மக்கள் பக்தி உள்ளவர்களாகவும் நேர்மையானவர்களாக-வும், உண்மை பேசுபவர்களாகவும் மற்றும் இரக்க குணம் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

மேலைநாட்டு வளமை, அறிவின் சாமர்த்தியத்தால் நிகழ்த்தப் பட்ட சாதனையாகும். அப்படிப் பார்த்தால் அறிவைவிட உயர்ந்த ஆன்மாவின் சாமர்த்தியம் இன்னும் பெரிதாக இருக்க வேண்டும். இது உண்மைஎன்றால் ஆன்மாவின் சாமர்த்தியத்தை நாம் எப்படிப் பயன்படுத்திக்கொள்வது? இந்தியாவை வளப்படுத்தும் இயக்கத்திற்கு யார் தலைமை தாங்குவது? அரசாங்கமா அல்லது ஒரு ஸ்தாபனமா அல்லது ஒரு தனி நபரா? ஆன்மாவின் சக்தியை பயன்படுத்திக் கொள்ளும் பழக்கம் இந்நாட்டில் உள்ளது. இருந்தாலும் தேசிய அளவில் மக்களிடையே பரவலாக இது பற்றிய விழிப்புணர்வு இல்லை. நம் நாட்டின் சிறப்பம்சம் என்னஎன்பது பற்றிய விழிப்புணர்வு முதலில் தேசிய அளவில் வரவேண்டும். அவ்விழிப்புணர்வு வந்தபிறகு அதை முறைப்படுத்த வேண்டும். இம்மாதிரி ஆன்மாவினுடைய சக்தி நம் நாட்டில் வெளிப்பட்டுள்ள சில இடங்களைப் பார்ப்போம்.

சுதந்திரம் வந்தவுடன் நாட்டிற்குத் தேவையான எதுவானாலும் அரசாங்கமே செய்ய வேண்டும்என்ற மனப்பான்மையிருந்ததால் சுமார் 10 அல்லது 20 ஆண்டுகள் நாட்டில் எதுவும் புதியதாகத் தொடங்கப் படவில்லை. மக்களுக்கு அத்தியாவசியமானவைஎன்பவை வருமானத்-திற்கு உரியவையாக இருந்தால் பொதுமக்கள் அரசாங்கத்தை எதிர்பார்க்கமாட்டார்கள். அப்படித் தானே நாட்டில் பெருகியவை: (1) பஸ் போக்குவரத்து, (2) ஆங்கில மீடியம் நர்சரி பள்ளிகள், (3) சினிமா தியேட்டர்கள், (4) ஆழ்துளைக் கிணறுகள் மூலம்



நீர்ப்பாசனம், (5) கல்யாண மண்டபங்கள், (6) என்ஜினீயரிங், மெடிக்கல், கலைக் கல்லூரிகள் - இவை நாட்டில் தொழில் பரவியதை விட அதிவேகமாகப் பரவி வருகின்றன.

நாட்டிற்கு நல்லது என்பதைத் தனக்குச் சொந்த லாபத்திற்காக ஒருவன் திறமையுடன் செய்து லாபமடைந்தால், அது நாட்டில் தானே பெருகும். பத்திரிகை உலகம் வளர்ந்ததும், சினிமா, T.V. பரவியதும், மோட்டார் பைக், Moped அளவு கடந்து உற்பத்தியாகிப் பயன்படுவதும் அரசு முனைந்து செயல்பட்டதைவிட மக்கள் ஆசைப்பட்டுச் செய்தது ஆகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அகந்தைஎன்பது உயர்ந்த ஜீவியத்தின் புதுமையான உடல். அது உருவம் பெற்றபின் சூட்சுமப் பார்வைக்குத் தெரியும்.

***அகந்தையின் உருவம் சூட்சுமப் பார்வைக்குத் தெரியும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தொடு உணர்வின் இன்பம், உணர்வின் கிளர்ச்சி, உள்ளத்தின் ஆர்வவேட்கை, அறியாமை மனதின் அறிவு வேட்கை ஆகியவை ஜீவன் முழுவதும் பரவி நிலவும் தியானத்திற்குத் தடை.

***உணர்ச்சி, கிளர்ச்சி, வேட்கை***
***ஜீவன் நிறைந்த தியானத்திற்குத் தடை.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVII. The Divine Soul

Being, knowledge have the same rule. Page No.156
Will with the being is another. Para No.11
Knowledge and will of others is yet another.
All its experience will be the play of a self-blissful conscious force of being.
There this truth of unity rules.
Will has to obey that unity.
There can be no strife of will with knowledge.
Neither of them can clash with delight.
Nor will the knowledge, will and delight of one soul clash with the knowledge, will and delight of another.
Because they are aware of that unity.
It is discord to our divided being.
There it changes to a meeting, entwining and mutual interplay of the different notes.
These notes are of one infinite harmony.



## 17. தெய்வீக ஆன்மா

ஜீவன், ஞானம் ஆகியவற்றிற்கும் இதுவே சட்டம்.
உறுதிக்குரியதும் இதுவே சட்டம்.
ஞானமும், உறுதியும் மற்றவருடையதானாலும் சட்டம் பொருந்தும்.
அதனுடைய அனுபவங்கள் அனைத்தும் தன்னையறியும் சக்தி தன்னை மறந்து லீலை செய்வதால் எழுவது.
ஐக்கியத்தின் சக்தி அங்கு ஆள்கிறது.
உறுதி அந்த ஐக்கியத்தைப் பணியும்.
ஞானமும், உறுதியும் மோதுவது இருக்காது.
இவையிரண்டும் அனந்தத்துடன் மோதுவதில்லை.
ஓர் ஆத்மாவின் ஞானம், உறுதி, ஆனந்தம் அடுத்த ஆன்மாவின் ஞானம், உறுதி, ஆனந்தத்துடன் மோதுவதில்லை.
அடிப்படையான ஐக்கியம் தெரிவதால் பிணக்கு ஏற்படுவதில்லை.
பகுதியான நம் ஜீவனுக்கே போராட்டம்.
அங்கு - உயர்ந்த ஜீவியத்தில் - பிணக்கு மாறும்; சந்திப்பாக மாறும், தழுவுதலாக மாறும், கலந்து விளையாடுவதாக மாறும்.
அவை அனந்தமான ராகத்தின் இனிமையான ஸ்வரம்.

God is the supreme Self of the divine soul. Page No.156
In its relations with God, it will sense oneness. Para No.12

It is the oneness of the transcendent and universal Divine with its own being.
It will enjoy that oneness with God with itself.
It would do so with its individuality.
With its other selves, it does so in its universality.
It will have relations of knowledge.
It will be the play of the divine omniscience.
For God is knowledge.
We have ignorance.
There it will be a holding back of knowledge.

It will be held back in the repose of Conscious self-awareness.

It is done so that certain forms of self-awareness may be brought forward into activity of Light.
The relations of the divine soul will have its aspect of will.
It will be there the play of omnipotence.
For God is Force, Will, Power.
We have weakness and incapacity.
In the divine soul, it will be a holding back of will.

It will be held back in tranquil concentrated force.
It is so because certain forms of divine conscious-force may realise themselves.
They realise themselves brought forward into forms of Power.



தெய்வீக ஆன்மாவுக்கு இறைவன் பிரம்மம்.
இறைவனுடைய தொடர்பில் அது ஒருமையை உணரும்.

தன் ஜீவனுடன் பிரபஞ்ச ஆத்மாவும், பரமாத்மாவும் ஒருமையை உணர்பவர்.

இறைவனுடனேயும் அது ஒருமையை உணரும்.
தன் தனித்தன்மையால் அதைச் செய்யும்.
மற்ற ஆத்மாக்களுடன் தன் பிரபஞ்ச அம்சத்தால் அதையே செய்யும்.
அதற்கு ஞானத் தொடர்புண்டு.
தெய்வம் எல்லாம் அறியும்என்பதன் லீலையது.
இறைவன்என்பது ஞானம்.
நமக்கு அஞ்ஞானம் உண்டு.
நமக்கு அஞ்ஞானம்என்பது தெய்வீக ஆத்மா தன் திறமையை அடக்குவதாகும்.
தன்னையறியும் சலனமற்ற நிலையில் அது தன் திறமையை மறைத்துக் கொள்ளும்.
சில ஞான ரூபங்கள் ஜோதியின் செயலில் வெளிப்பட அதைச் செய்கின்றனர்.
தெய்வீக ஆன்மாவின் உறவுக்கு உறுதியின் அம்சம் உண்டு.
அது இருக்கும். அது எல்லாம் வல்லவனின் லீலை.
இறைவன் சக்தி, உறுதி, அதிகாரம்.
நமக்கு இயலாமை, முடியாமையுண்டு.
தெய்வீக ஆன்மாவில் அதே செயல் உறுதியைக் கட்டுப்படுத்தி அடக்குவதாக இருக்கும்.
அமைதியான செறிந்த சக்தியுள் அது அடங்கும்.
தெய்வீகமான தன்னையறியும் சக்தியின் சில ரூபங்கள் சித்திக்க அது நடைபெறுகிறது.
அதிகார சக்தியின் ரூபங்களாக அவை வெளிப்பட்டால் அவை சித்திக்கின்றன.

The divine soul's relations of love and delight will be the holding back of joy.

It is held back in the still sea of Bliss.

It is done so that certain forms of divine union and enjoyment will be realised.

They will be realised in an active upwelling of waves of the Bliss.

All its becoming will be formation of the divine being.

It is in response to these activities.

What is with us cessation, death, annihilation will be only rest, transition.

It will be a holding back of the joyous creative Maya in the eternal being of Sachchidananda.

This oneness will not preclude relations of the divine soul with God, its supreme Self.

It is founded on the joy of difference separating itself from unity to enjoy that unity otherwise.

It will not annul the possibility of any of these exquisite forms of God-enjoyment.

It is the highest rapture of the God-lover in his clasp of the Divine.

This is the nature of the life of the divine soul. Page No.157 Para No.13

It has to realise itself.

In what conditions will it do so?

By what condition and in which condition will it realise itself?

There are properties, qualities, activities and faculties.



அன்பும், ஆனந்தமும் வெளிப்பட தெய்வீகஆன்மா சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அமைதியான ஆனந்தசாகரத்துள் அவை அடங்கி ஒடுங்குகின்றன.

தெய்வம் ஒருமையாலும், அனுபவத்தாலும் சில ரூபங்கள் சித்திக்க வேண்டி அது நடக்கிறது.

ஆனந்த அலைகள் விறுவிறுப்பாகப் பொங்கி எழும்பொழுது அவை பலன் தரும்.

தெய்வீகஜீவனின் ரூபங்கள் உருவகமாகி இது போன்ற நிலையைச் சிருஷ்டிக்கின்றன.

இந்நிகழ்ச்சிகளின் வழக்கமான முடிவுகள் அவை.

மரணம், அழிவு, முடிவுஎன நாம் அனுபவிப்பது அங்கு மாற்றம், அமைதியாகும்.

சச்சிதானந்தம் ஆனந்தமாக மாயையால் சிருஷ்டிப்பதை அது பிடித்து நிறுத்தும்.

இந்த ஒருமை தெய்வீக ஆன்மாவுக்கு இறைவனுடன் - அதன் உயர்ந்த பிரம்மத்துடன் - உள்ள தொடர்பைத் தடுக்காது.

மாறுபாட்டின் ஆனந்தம் அதன் அடிக்கல். ஐக்கியத்தினின்று பிரிந்து ஐக்கியத்தை வேறு வகையாக அனுபவிக்கச் செய்கிறது.

இறைவனை அற்புதமாக அனுபவிக்கும் எந்த சந்தர்ப்பத்தையும் அது கரைக்காது.

இறைவனின் அணைப்பில் அதிகபட்ச ஆனந்தபூரிப்பு அது.

இதுவே தெய்வீக ஆன்மாவின் சுபாவம்.

அது தன்னைச் சித்திக்க வேண்டும்.

எந்த நிபந்தனைகளால் அது முடியும்?

எது நிபந்தனை? எந்தச் சந்தர்ப்பம் அதைப் பூர்த்தி செய்யும்?

அவை குணங்கள், சுபாவம், செயல்கள், செயல்திறன்.

They are the instrumentation of forces formulating themselves.
All experience in relation proceeds through such instrumentations.
We can offer an example.
Mind throws itself into various forms of mind power.
They are judgement, observation, memory, sympathy, etc.
These are proper to its being.
So also the Supermind must act.
It will act through forces, faculties, functionings proper to supramental being.
Supermind is Truth-Consciousness.
Otherwise there will be no play of differentiation.
We can consider them later.
Here we are only considering metaphysical foundations, their essential nature and principles.
The one essential condition is to abolish the ego.
Its presence is our mortality and fall from the Divine.
This is our 'original sin'.
It is our deviation from the Truth, the Right, the Spirit, from its oneness, integrality and harmony.
They are necessary for the plunge of Ignorance.
It is the soul's adventure in the world.
From that world are born suffering and evil.
This is the aspiring humanity.

*The End*

❀❀❀



அவை சக்திரூபம் பெற உதவும் கருவி.

உறவில் அனுபவம் அதுபோன்ற கருவிகளால் நடைபெறுகிறது.
ஓர் உதாரணம் தர முடியும்.
மனம் பல்வகையான மனச்சக்திகளின் ரூபம் பெறுகிறது.
அவை தீர்மானம், கவனம், நினைவு, அனுதாபம் ஆகியவை.
அவை அதன் ஜீவனுக்குப் பொருத்தமானவை.
அதுபோல் சத்தியஜீவியம் செயல்பட வேண்டும்.
சக்தி, செயல்திறன், செய்முறை வழியாக சத்தியஜீவியத்திற்கேற்ப அவை செயல்படும்.
சத்தியஜீவியம் சத்தியம் - ஜீவியம்.
அப்படியில்லாவிட்டால் மாறுபாட்டில் லீலையில்லை.
நாம் இதைப் பின்பு பார்க்கலாம்.
அதன் சாரமான சுபாவத்திலும், தத்துவத்திலும் தற்சமயம் நாம் தத்துவ விசாரணை செய்கிறோம்.
ஒரு முக்கிய நிபந்தனை - அகந்தை அழிய வேண்டும்.
அகந்தை இருந்தால் மரணமுண்டு; இறைவனை விட்டகல வேண்டும்.
'பாவம்' என்பதில்லை. அது பிறப்பில் ஏற்பட்டதன்று.
சுமுகம், ஒருமை, பூரணத்திலிருந்தும் சத்தியம், ஆன்மா, தர்மத்தினின்றும் நாம் விலகுகிறோம்.
அஞ்ஞானத்துள் அமிழ அவை அவசியம் தேவை.
அது உலகில் ஆன்மா மேற்கொண்ட பயங்கர விளையாட்டு.
அவ்வுலகினின்று வேதனையும், தீமையும் பிறந்தன.
இதுவே மனிதகுலம் தேடுவது.

*முற்றும்*

❀❀❀

## அன்பர் கடிதம்

எனதுஊர் விருதுநகருக்கு அருகிலுள்ள ஒரு கிராமம். ஊருக்குச் சென்ற நான் அங்குள்ள பெரிய ஏரியில் குளிக்க ஆசைப்பட்டுக் குளித்தேன். குளித்து முடித்தவுடன் எனதுகம்மல், மாட்டலோடு நீரில் காணாமல் போனது. அங்குள்ள அனைவரும் இங்கு எது தொலைந்தாலும் கிடைக்காதுஎன்று கூறினார்கள். ஆனால் நான் அன்னையை அழைத்து, தொலைந்த என்கம்மல், மாட்டலோடு கிடைக்க வேண்டும்என்று பிரார்த்தனை செய்தேன். ஒரே இடத்தில் கம்மல், திருகு, மாட்டல் மூன்றுமே கிடைத்தது. அங்குள்ள அனைவரும், "எந்த தெய்வத்தை வணங்கினீர்கள்? எங்களுக்கும் சொல்லுங்கள்!" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். அன்னையை நம்பினால் கைவிடமாட்டார்என்பது அங்குள்ள அனைவருக்கும் புரிந்தது.

- M. ***பஞ்சவர்ணம், பெரம்பூர், சென்னை-11.***

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தகப்பனார், மகன், வாக்காளர், தலைவர்என்ற பகுதிகளை மனிதன் கொண்டவன்என்று நம்மால் ஏற்க முடிகிறது. ஆனால் அகண்டமாகவும், கண்டமாகவுமானவன் அவன்என ஏற்க முடிவதில்லை.

***எதிராக உள்ள நிலைகளை ஏற்கும் திறன் யோகத்திற்குண்டு.***



## என்னை எவரும் வணங்க வேண்டாம்

கர்மயோகி

"என்னை எவரும் வணங்க வேண்டாம்" என்று அன்னை அவ்வப்பொழுது கூறுவார். தெய்வத்தை வணங்குவதற்குப் பதிலாக சாதகர்கள் தெய்வமாக வேண்டும், அன்னையாக வேண்டும், இறைவனாக வேண்டும்என்பது அன்னை கருத்து.

"இது என்ன சாமி இது! புதியதாக இருக்கிறதே! எதைக் கேட்டாலும் பலிக்கிறதே! இப்படியுமிருக்க முடியுமா! நம்ப முடியவில்லையே!" என்று ஒரு தொழிலாளி அன்னையை அறிந்த புதிதில் கூறி ஆச்சரியப்பட்டார்.

**அன்னை கேட்பனவெல்லாம் தரும் தெய்வம்.**

"என்னை எது வேண்டுமானாலும் கேட்கலாம்" என்று அன்னை கூறுகிறார். அன்பர்கள் அனுபவத்தில் அடுத்ததும் உண்டு. நாம் ஆசைப்பட்டு மறந்தவையுண்டு. இன்று அவை நினைவிருக்காது. அன்னையிடம் வந்து ஈடுபாடு ஏற்பட்டவுடன் அவை ஒவ்வொன்றாய்ப் பலிக்கும். SSLCயை முடித்து ஆசிரியரானவருக்கு மேலே படிக்க ஆசை. எந்தப் படிப்பை எடுத்தாலும் அதில் ஆங்கிலத்தில் எழுதும் பேப்பர் இருப்பதால் அந்த ஆசை மறந்துவிட்டது. 1951இல் SSLC படிப்பு முடிந்தது. 1970இல் அன்னை அறிமுகமானார். அந்த ஆங்கிலப் பேப்பர் விலகியது. B.O.L. பட்டம் எடுத்தார். பிறகு M.A. பட்டம் எடுத்தார். அதன்பின் M.Ed. பட்டம் எடுத்தார். பட்டம் எடுக்க ஆசைப்பட்டார், ஆனால் M.A.யைக் கனவிலும் கருதவில்லை.

✡ அதற்கு அடுத்த கட்டமும் உண்டு.
பழைய ஆசைகள் மறந்துவிடுகின்றன.
அப்படி ஓர் ஆசையிருந்ததே மறந்தும்விடும்.
அவை உயிர் பெறும், பலிக்கும்.

பலித்தபின் லேசாக இப்படி ஓர் ஆசையிருந்தது சில சமயங்களில் நினைவு வரும்.

அவையும் ஈடுபாடு அதிகமாகும்பொழுது அபரிமிதமாகப் பலிக்கும்.

சிறு வயதிலிருந்தே வீட்டிலும், பள்ளியிலும், ஆபீசிலும் வேலையே செய்யப் பிரியப்படாதவர் ஒருவர்.

அப்படிப்பட்டவருக்கு வேலை போவது வழக்கம்.

20 ஆண்டில் அப்படிப்பட்டவர் 19 வேலைகளிலிருந்தார்.

வேலை செய்யப் பிரியப்படாத இந்த மனிதர் அன்னையிடம் வந்தார்.

வேலை செய்யாமல் சம்பளம் வேண்டும் என்றார்.

10 ஆண்டு சர்வீஸ் இருக்கும்பொழுது இவருக்கு ஓய்வு, 10 ஆண்டு சம்பளம், பென்ஷனுடன் வீட்டிற்கு அனுப்பினார்கள்.

"இது என்ன, தவறான பிரார்த்தனை பலிக்கிறதே?" என்றார் அப்படிப் பட்டவர் ஒருவர்.

சமூகத்திற்குத் தவறு, வாழ்வில் ஆழ்ந்த அம்சம்.

அன்னையை ஆழ்ந்து ஏற்றுக்கொண்டால், ஆழ்ந்த அம்சங்கள் பலிக்கும்.

கேட்பதைவிட அதிகமாகத் தருவதும், கேட்காததைக் கொடுப்பதும், முடிவான பலனை முன்பே தருவதும், கேட்கத் தெரியாததைக் கொடுப்பதும் அன்னையின் பாங்கு.

✡ எதையும் கேட்காமலிருப்பது நல்லதுஎனவும் கூறியுள்ளார்.

நாம் வேறு, அன்னை வேறுஎன்ற நிலையில் நாம் அன்னையைக் கேட்கிறோம்.

நெருங்கி வந்தால், கேட்கத் தோன்றாது, மறந்து போகும்.

ஐக்கியமானால் கேட்க முடியாது.

எப்படி நம்மையே நாம் கேட்பது?

**கேட்காமலிருப்பது நாமே அன்னையாவது என்பது சட்டம்.**



✡ "ஏன் எனக்கு உங்கள் நினைவு வருவதில்லை?" என அன்னை பகவானை சூட்சும உலகில் கேட்டார்.

✡ "என்னோடு ஐக்கியமானதால் நினைவு வரவில்லை" என்றார் பகவான்.

✡ ஈடுபாடு அதிகமானால் மனம் செயல்படாது; உணர்வு மேலிடும்; நெஞ்சம் நெகிழும்.

அதற்கும் அடுத்த கட்டம் உடல்.

அதனினும் உயர்ந்த நிலை ஜீவன்.

ஜீவனில் அன்னையுடன் ஐக்கியமானவரால் அன்னையை எதுவும் கேட்க முடியாது.

M.A., M.Ed. எடுத்த அந்த அன்பர், வயது முதல் அத்தனை சந்தர்ப்பங்களையும் ஒதுக்கிவிட்டு, அன்னையை மட்டும் நம்பி Ph.D. எடுக்க முயன்றால் அதுவும் பலிக்கும்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனிதனின் (uniqueness) தனித்தன்மை உச்சத்தை அடைய, இறைவனோடு அவன் ஐக்கியமாக வேண்டும்.

***உச்சக்கட்ட உயர்வு ஐக்கியத்திலுள்ளது.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சுமுகம்என்பது வலுவானது தன் தாழ்ந்த பகுதியில் உள்ள விழிப்பின் அளவைப் பொருத்தது.

***உயர்ந்தது தாழ்ந்ததில் விழித்தால் சுமுகம் ஏற்படும்.***

# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

## RECEPTIVITY - ஏற்புத்திறன் :

அன்னை அன்பர்களுக்கு அன்னையின் அருள் அவர்கள் வாழ்வில் சாதிக்க விரும்புவதை அடைவதற்கு உறுதுணையாக இருக்கக் காத்துக்கொண்டிருக்கிறது.

நம்மால், நம் முயற்சியால், நம் திறமையால் சாதிப்பதற்கு அளவு உண்டு. அது நம் திறமையையும் அறிவையும் பொருத்தது. ஆனால் அன்பர்கள் அன்னை சக்தியைத் தங்கள் வாழ்வில் செயல்பட அனுமதித்தால் சிறியது பெரியதாக மாறும். இதற்கு ஏற்புத்திறன் அவசியம். நம் மனம் உடனே கேள்வியை எழுப்புகின்றது. ஏற்புத் திறனை எப்படி உயர்த்துவது? ஏதேனும் formula இருக்கின்றதா? Shortcut method உண்டா? காசு போட்டால் instant coffee வருவது போல் ஏதேனும் instant magic இருக்கின்றதா? என்று பல கேள்விகளை எழுப்புகின்றது. அன்னையிடம் வந்தபின் நமக்கு வருவது எல்லாமே அருளின் செயல்பாடுதான்என்று மனம் ஏற்றுக்கொண்டால், ஏற்றதை உண்மைஎன்று நம்பினால், அந்த நம்பிக்கை மட்டுமே நமது ஏற்புத்திறனை அதிகரிக்கும். மாறாக அருள் நான் நினைத்தபடிதான் வரவேண்டும்என்ற மனநிலை ஏற்புத்திறனுக்கு எதிரி.

அருள், வேலையில்லாத ஒருவனுக்கு வேலையை வாங்கிக் கொடுக்கின்றதுஎன்று வைத்துக்கொள்வோம். சம்பளமும் எதிர்பார்த்-ததைவிட அதிகம். இருப்பினும் மனம் கேள்வியை எழுப்புகின்றது. நான் வெளியூர் செல்ல வேண்டுமே, தினமும் 10 மைல் பஸ்ஸில் போக வேண்டுமே, ஒரு மைல் நடக்க வேண்டுமே, மதியம் சாப்பாடு



canteenஇல் சாப்பிட வேண்டுமே, T.V.யில் முக்கியமான programme பார்க்க முடியாதே, வேலை நான் விரும்பியதுபோல் இல்லையேஎன்று முட்டுக்கட்டை போடுகின்றது. நாமே நமக்குத் தடையை ஏற்படுத்திக்கொள்கின்றோம். நமக்கு மட்டுமன்று, வருகின்ற அருளையும் தடை செய்கின்றோம்என்று தெரிவதில்லை. நாம் நம்முடைய விருப்பத்தை அன்னையின் மேல் திணிப்பதால் அன்னையின் அருள் செயல்படத் தடை ஏற்படுகின்றது. வருகின்ற அருள் நம்முடைய personalityக்குத் தகுந்தபடிதான் வரும். ஆகவே அதைத் தடையின்றி சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வது Receptivity ஆகும். அது அருள் நம் வாழ்வில் தொடர்ந்து செயல்பட அஸ்திவாரமாக அமைகின்றது.

வாழ்வில் அன்னை விரும்பும் பண்புகளைக் (values) கடைப்பிடிக்க முயன்றால் நம்முடைய ஏற்புத்திறன் அதிகரிக்கும். நம்முடைய சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வது, வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, தினசரி கணக்கு எழுதுவது, குறித்த நேரத்தில் செயல்படுவது (punctuality), தணிவான பேச்சு, அடக்கம் போன்ற பண்புகள் நம்முடைய personalityஐ expand செய்வது மட்டும் அல்லாமல் நம்மை அன்னையை நெருங்கி வரவும், அவர் அருள் நம் வாழ்வில் செயல்படவும் உறுதுணையாக இருக்கின்றது. நாம் நம்முடைய சக்தியை முழுமையாக அன்னையின் கோட்பாடுகளை ஏற்றுச் செயல்படுத்தும் பொழுது அன்னை சக்தி நம்முள்ளே அபரிமிதமாகப் புகுந்து, செயலை ஓர் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வதைக் காணலாம். அதிர்ஷ்டத்தின் கதவுகள் திறந்து நம் வாழ்க்கை அதனுள் நுழைவதைக் காணலாம்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## மனித முயற்சியின் புனித உருவம்

கர்மயோகி

ஆசை தவறு, பேராசை பெரும் தவறு என்றவர்கள் விடாமுயற்சியின் பெருமையைப் பெரிதும் பாராட்டினர்.

ஆதாய முயற்சி ஆசை, அது சரியில்லை.

இலட்சியமான முயற்சியை இடைவிடாது பின்பற்றுவது உயர்ந்தது.

இந்தியா ரிஷிகள் பிறந்த புண்ணிய பூமி.

ஸ்ரீ அரவிந்தம் ரிஷிகள் பாதையில் வாழ்வை ஏற்கச் சொல்கிறது.

ரிஷிகள் இறைவனுடன் இரண்டறக் கலந்தனர்.

ஸ்ரீ அரவிந்தம் இறைவனாக வாழ்வை மலரச் செய்கிறது.

இவை யோகத்தை நாடும் உயர்ந்தவர்க்குரியன.

யோக வாழ்க்கை எளிய மனிதனுக்குரியது.

யோக வாழ்க்கையை ஏற்றவரும் யோகத்தை மனதில் கொண்டால் அவர்கட்கும் ஆதாயம்; வருமானம் பொருட்டன்று.

உயர்ந்தவர் உன்னத இலட்சியத்தை நாடுவது சிறப்பு.

**யோகத்தையும், யோக வாழ்வின் உயர்ந்த இலட்சியத்தையும் தவிர்த்து எதுவும் முடியாத எளியவனுக்குண்டானது என ஒன்றுண்டா? என்ற கேள்விக்குப் பதிலிறுக்கும் கட்டுரையிது**.

1947க்கு முன் பிறந்தவர் வாய்ப்பே அறியாத மனிதர்.

1947க்குப் பின் பிறந்தவர் சுதந்திர மண்ணில் பிறந்தவர்.

1970, 1980க்குப் பின் பிறந்தவர் வாய்ப்பை அறிவர்.

1990க்குப் பின் வாய்ப்பு மனிதனை நாடி வர ஆரம்பித்தது.

2000க்குப் பின் வாய்ப்பு வந்து ஏற்குமாறு வலியுறுத்துகிறது.

சுமார் 30 லட்சம் பேர் அமெரிக்கா சென்று அமெரிக்க வருமானம் பெறுகிறார். அதை வாய்ப்புஎன நாம் அறிகிறோம்.



அதைப் பெற்றவர் அதிர்ஷ்டம் பெற்றவர்.

அமெரிக்க வருமானம் தலைக்கு 40 ஆயிரம் டாலர். சுமார் 20 லட்சம் ரூபாய். ஒரு வீட்டில் 4 பேரானால் இக்கணக்குப்படி அந்த வீட்டு வருஷ வருமானம் 100 லட்ச ரூபாய். மாதம் 8 லட்சம் ரூபாய்.

இந்தியாவில் அவ்வருமானம் உயர்மட்டத்திலுள்ளவர் பலர் பெறுகின்றனர்.

யோக இலட்சியம் என்பது கண்டம் அகண்டமாவது (finite becomes Infinite). மனிதன் கடவுளாவது யோக இலட்சியம்.

1956இல் வந்த சத்தியஜீவியம் வருஷாவருஷம் வலுப்பெறுகிறது.

1960இல் பிரார்த்தனை செய்து பலன் பெற்றவர், 2006இல் அதே பிரார்த்தனைக்குப் பெரும்பலன் வருவதைக் காண்கிறார். அன்று வாடகை வீட்டிற்குப் பிரார்த்தனை செய்தால் நல்ல மனிதருடைய வசதியான வீடு கிடைத்தது. இன்று அதே பிரார்த்தனைக்குச் சொந்த வீடு கிடைக்கிறது. **இன்று அன்னையின் சூழல் அபரிமிதமாக வளர்ந்துள்ளது**.

கடவுளாகாவிட்டாலும் அமெரிக்க வருமானம் இங்கேயே பெறும் சக்தி உலகில் வந்துவிட்டது என அன்பர்கள் அறிய வேண்டும்.

Moped பெற்றதைப் போற்றியவர் வீட்டில் இன்று காரும், வண்டியும், moped உள்ளதைக் காண்கிறோம்.

1965இல் ரூ.1/- கூலி. இன்று அதே கூலி ரூ.150/-.

கூலி 150 மடங்கு உயர்ந்தது. இதற்கு மனிதன் செய்ததென்ன?

அமெரிக்கர் 40 ஆயிரம் டாலர் சம்பாதித்தால், அதே கணக்குப்படி இந்தியர் 3000 டாலர் சம்பாதிக்கின்றனர். 13 மடங்கு பெரியது அது. நாட்டில் கூலி 150 மடங்கு உயரும் சூழல் பெற்றிருப்பதால் 13 மடங்கு இந்தியரால் இங்கேயே வருமானத்தை உயர்த்த முடியுமா?

இது பழைய தொழிலில் முடியாது.

பழைய மனப்பான்மை இதைச் சாதிக்காது.

9 மணிக்கு ஆபீஸ் போய் 5 மணிக்கு வீட்டிற்கு வர வேண்டும் என்ற மனநிலைக்குப் பலன் தாராது.

‘எனக்குப் பிடித்த வேலை வேண்டும்’.

‘என் சொந்த ஊரிலேயே வேண்டும்’.

‘நிம்மதியாக வாழ வேண்டும்’.

‘பிரச்சினையற்ற வாழ்வு தேவை’ என்பவர் இதற்கு விலக்கு.

‘எந்த வேலையாயினும் செய்கிறேன்’.

‘எங்கு வேண்டுமானாலும் போகிறேன்’.

‘எந்த சந்தர்ப்பத்திலும் என் சொந்த நிம்மதி கலையாது’.

‘எந்த பிரச்சினையையும் தீர்க்க முடியும்’ என்ற மனநிலையுள்ளவர்க்கு இது பலிக்கும்.

Courseஐத் தேர்ந்து, தெளிந்து எடுக்க வேண்டும்.

Latest information புதியதை ஆர்வமாக ஏற்க வேண்டும்.

உலகில் அதிகபட்ச வருமானமுள்ளவருடன் சமமாக வேண்டும்.

ஒவ்வொரு நிமிஷமும் முன்னேற வேண்டும்.

புதிய வாய்ப்பு வருபவற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். மாறத் தயங்கக் கூடாது.

முன்னேறியவர் பயன்படுத்திய அத்தனை வாய்ப்புகளையும் ஒன்று விடாமல் ஏற்க வேண்டும்.

வாழும் ஆர்வம் முனைப்பாக இருக்க வேண்டும்.

நம்மைவிட 20 வயது குறைந்தவர் போல் செயல்பட வேண்டும்.

உலகின் முன்னணியை கண்முன் நிறுத்த வேண்டும்.

அவரைத் தேடி ஏராளமான வாய்ப்புகள் வரும்.

வருவதை ஏற்றால் பெற முடியாதவற்றை எல்லாம் பெறலாம்.

வாய்ப்புக்குக் குறைவில்லை, ஏற்பவர் குறைவு.

கண் விழித்துப் பார், கடவுள் தெரியும்.

அது முயல்பவர்க்குரியது.

இருந்த இடத்திலேயே, உள்ள வேலையை சிறப்பிற்கு எடுத்துக் காட்டாக, **மனம் அன்னையில் முழுமையாக லயித்து**, அனைவரிடமும்



நல்ல பெயரெடுக்கும் அடக்கத்துடன் செய்தால் மனம் அடங்கும்.

வேலை சிறக்கும்.

வேலை செய்யுமிடத்தில் மௌனம் கனக்கும்.

சூழல் செறிவு பெறும்.

இத்தனை நாள் கேட்ட கூச்சலிருக்காது.

புலம்பியவர் அடங்குவர்.

குறை கூறியவர் நம்மை விட்டகல்வர்.

பொறாமைக்காரர் கண்ணில் படமாட்டார்கள்.

செய்யும் வேலையின் நேர்த்தி பிறர் கண்ணில் படும்.

புகழ்மாலை வரும்.

அது அடக்கத்தை உயர்த்தும்.

வேலை யோகமாக மாறும்.

ஊதுவர்த்தி கொளுத்தாமல் அந்த மணம் எழும்.

மனத்தில் அன்பு சுரக்கும்.

மறுத்துப் பேசியவர் மகிழ்ந்து காண்பார்.

அன்னை நெஞ்சில் தெரியும்.

சமர்ப்பணம் உள்ளிருந்து எழும்.

அது சரணாகதியாக மாறும்.

அமெரிக்க வருமானம் நம்மைத் தேடிவரும், மீண்டும் வரும். ஒரு முறை சுறுசுறுப்பான பக்தர்கட்குரியது. அடுத்த முறை அமைதியான அன்பர்கட்குரியது. இரண்டிற்கும் முழுப்பலன் உண்டு. எதையும் யாரும் ஏற்றுப் பயன் பெறலாம்.

Human Cycleஎன்ற நூலில் பகவான் Ideal Laws of Social Development சமூக முன்னேற்றத்தின் இலட்சியச் சட்டங்கள் என்பதைப் பற்றி எழுதும்பொழுது,

**தனி மனிதன் சமூகத்திற்கு சமம் என்கிறார்.**

தனி மனிதனுள் முழுச் சமூகமும் உள்ளது என்கிறார். குடும்பம், ஜாதி, நாடு, மனிதகுலம்என்ற நிலைகள் உள. மனிதன் இவற்றால் மனித குலத்தினின்று பிரிக்கப்படுகிறான். இடைப்பட்டவை அனைத்தும் மறைந்து மனிதன் மனித குலமாவான் என்கிறார் பகவான். அதுவே சமூகம் வளரும் இலட்சியச் சட்டம்.

ஒரு மனிதன் உலகம் சாதிப்பதைச் சாதிக்கலாம்என்று பொருள் எனவும் விளக்கம் கூறுகிறார். உலகில் உள்ள 600 கோடி மக்கள் சாதனையை உலகம் முழு முன்னேற்றம் பெற்ற நேரம் ஒருவன் சாதிக்கலாம். இது பகவான் இலக்கு.

அமெரிக்காவில் 30 கோடி மக்களில் 10 கோடி மக்கள் சராசரியாக 40 ஆயிரம் டாலர் சம்பாதிக்கின்றனர். இவர்கள் மேதைகளில்லை. அமெரிக்காவில் சராசரி மனிதர். அந்த வருமானத்தை முழு முயற்சியால் அருளின் துணைகொண்டு இங்கு இப்பொழுது இந்தியாவில் சம்பாதிக்கலாம்என்று நான் கூறுகிறேன். இலட்சக்கணக்கான இந்தியர் இந்த வருமானம் - 20 லட்சம் வருஷத்திற்கு - இப்பொழுது பெறுகின்றனர். இவர் உயர் மட்டத்தில் உள்ளவர். எல்லா மட்டங்களிலுள்ளவரும் பெற முடியும்.

✡ முயற்சி முழுமையானால்,

✡ மனித முயற்சி புனித முயற்சியானால்,

✡ அகத்திலும், புறத்திலும் அருள் செயல்பட்டு,

✡ அபரிமிதமான வருமானம் தரும்.

✡ வேண்டியவை:

**நம்பிக்கை, உறுதி, முயற்சியின்முழுமை.**

Human Resourcefulness கற்பக விருக்ஷமான மனிதன்.

✡ தனக்காக வேலை செய்பவன் பிறருக்காகச் செய்வதைவிட அதிகமாகச் செய்வான்.



தனக்காக எனில் ஆர்வம் முந்திக்கொண்டு வரும்.

7 மணிக்கு எழுபவன் தனக்காகஎன மாறினால் 5 மணிக்கு எழுவான்.

வேலையில் நேற்றுவரை படாத விஷயம் இன்று கண்ணில் படும்.

புதிய யோசனைகள் மனதில் எழுந்தபடியிருக்கும்.

பிறருக்காக 1 ஆண்டில் 2000 ரூபாய் சம்பாதித்தவர் தனக்காக மாறி 2½ ஆண்டில் 22,000 ரூபாய் சம்பாதித்தார்.

கடைப் பையன் முதலாளியானால் வாடிக்கைக்காரர் அனைவரும் நினைவில் எழும்.

அவர்கள் பழக்கம் அனைத்தும் யோசனைசெய்யாமல் புரியும்.

அமெரிக்கா வளமானதற்கு முனைவர் entrepreneur காரணம்.

நம் நாட்டில் முனைவர் அவருக்குச் சளைத்தவரில்லை.

முனைவர் அனைவரும் சொல்ப காலத்தில் கோடிக்கணக்காகச் சம்பாதிக்கிறார்கள்.

அமெரிக்காவில் அனைவரும் முனைவர்.

அமெரிக்க முனைவர் வேலையைத் திறம்படச் செய்வார்கள்.

நம் நாட்டில் ஆன்மீகச் சூழலாலும், அன்னைச் சூழலாலும் முனைவருக்குத் திறன் அதிகம்.

இன்று நாம், கடைத்தெரு பெருகுவதில் அதைக் காண்கிறோம்.

பெருகுவது பழைய மளிகைக் கடை, நகைக் கடையாகப் பெருகுகிறது.

புதுத் தொழில் - விளம்பரம், credit card, கம்ப்யூட்டரில் - இலாபம் அதிகம்.

அவற்றை இந்தியர் மேற்கொண்டால் பலன் பதினாயிரம் மடங்கு உயரும்.

❀ ❀ ❀

**Soldiers with Mother's face going to war in Bangaladesh in the dream of a Sadhak.**
**பங்களாதேஷ் போரில் சிப்பாய்கள் அன்னை முகத்துடன் போரிட்டதாக ஒரு சாதகர் கனவு கண்டார்.** *- அஜெண்டா*

✡ பிரார்த்தனையால் பலிக்கும் எந்தக் காரியத்தின் மீதும் அன்னையின் வெள்ளொளி, கரம், பகவானுடைய நீலநிறம், அன்னையின் கண்ணிருப்பது சூட்சுமப் பார்வையுடையவர்க்குத் தெரியும்.

எதுவும் தெரியாவிட்டால் அப்பொருள் பிரகாசமாக இருக்கும்.

அது சாப்பிடும் பொருளானால் அளவு கடந்து ருசியாக இருக்கும்.

அப்பொருள் வரும்பொழுது அங்கு ஊதுவர்த்தி மணம் எழும்.

அப்பொருள் தொடுவதற்கு இதமாக இருக்கும்.

**பிரார்த்தனையால் பலித்தபொழுது அன்னையின் அம்சம் ஏதாவது ஒன்று தவறாமல் இருக்கும்.**

✡ ஓர் அமெரிக்கப்பெண் இங்கு வந்து தங்கினார்.

அமெரிக்காவில் சேவை செய்ய ஓர் அமெரிக்கர் இங்கிருந்து அங்கு சென்றார்.

இப்பெண் அவருக்குத் தன்காரைப் பயன்படுத்த அனுமதி தந்தார்.

அவர் காரை ஸ்டார்ட் செய்தார்.

நான்கு கதவுகளும் திறந்துகொண்டன.

“இது என்ன, இந்தக் கார் அந்த அமெரிக்கப்பெண் போலவே இருக்கிறது?” என்றார்.



அப்பெண்ணுக்கு எந்தக் கட்டுப்பாடுமில்லை.

யார் பேசினாலும் குறுக்கே பேசுவார்.

யார் செய்வதையும் மறுத்துச் செய்வார்.

அவருடனிருந்தவர் அவரைப் பிசாசுஎன்பர்.

அவர் குணம் அவர் காருக்குண்டு.

இது வாழ்வின் சட்டம்.

✡ 1940இல் ஸ்ரீலங்காவில் ஒருவர் பணம் சம்பாதித்தார்.

அவர் மகன் அப்பணத்தைத் தொழிலில் பெருக்கினான்.

அதைக் கொண்டு தமிழ்நாட்டிற்கு வடக்கே சொத்து வாங்கினான்.

அதை விற்று தமிழ்நாட்டில் 1965இல் வேறொரு சொத்து வாங்கினான்.

1970இல் அதையும் கொடுத்துவிட்டு வடக்கே சென்றான்.

1985இல் அந்த சொத்தில் இலங்கை அகதிகள் வந்து தங்கினர்.

1940இல் அவர் சம்பாதித்தது உழைக்காமல், பிறருழைப்பால் சம்பாதித்தது.

1985இல் அவர் வாங்கிய சொத்தில் தங்கிய அகதிகள் வேலை செய்யாமல் சம்பளம் கேட்டனர்.

- ❀ நாய் விற்ற காசு குறைக்கும்.
- ❀ 1940இல் ஏற்பட்ட காசின் அம்சம் 1985இல் தெரிகிறது.

✡ Pride and Prejudiceஎன்பது 200 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட ஆங்கில நாவல். அன்பர்கள் பலரும் அதை 1980 முதல் Life Responseக்காக விவரமாகப் படிக்க ஆரம்பித்தனர்.

அந்நாவல் சினிமாவாக ஒரு முறை அப்பொழுது வந்தது. மீண்டும் படமாக எடுத்தனர்.

மூன்றாம் முறையாகவும் படம் எடுத்தனர்.

எல்லா அன்பர்களும் அந்நாவலை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டனர்.

நாவலின் ஆசிரியர் ஜேன்ஆஸ்டின் வாழ்வைப் படமாக எடுத்தனர். Secret சமீபத்தில் பிரபலமாயிற்று. அதன் website ஒன்றிற்கு ஒரு நாளில் 80,000 பேர் வந்தனர்.

Pride and Prejudice websiteக்கு 1,50,000 பேர் வந்தனர்.

❀ அன்னைஎனில் அபிவிருத்தி, பெருக்கம், முன்னேற்றம்.

❀ அன்பர்கள் அக்கதையை நாடியவுடன் நாவலும், நாவலாசிரியையும் பிரபலமடைவது அன்னையின்முத்திரை.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனத்திடமிருந்து உடல் அறிய அதிக நாளாவதில்லை. ஏனெனில் அது மேலிருந்து கீழே வருவது. உடலிலிருந்து மனம் அறிய பல நூற்றாண்டுகளாகும். அது மேலே போவதால் நாள் அதிகமாகும்.

***அனுபவம் அறிவாவதைவிட அறிவு சீக்கிரம் அனுபவமாகும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சிறிய மனிதனுக்குப் பிரபஞ்சத்தை அனந்தன் அளிக்க முன்வந்தால், அனந்தனைத் தன்வாழ்வுக்குள் சுருக்க மனிதன் முனைகிறான்.

***தன்னைக் காப்பாற்றுவதே சரிஎன்பது அனந்தனுக்கும், மனிதனுக்கும் பொது.***



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

***46.*** *அறிவுடையாரை அரசனும் விரும்பும்.*

✡ **அன்பருக்கு அரசவையிலும் அமோக வரவேற்புண்டு.**

***47.*** *அசை போட்டுத் தின்பது மாடு.*
*அசையாமல் விழுங்குவது வீடு.*

✡ **உயிரைவிட்டுத் தீர்க்கும் பிரச்சினையை சமர்ப்பணம் உயிர் இனிக்கத் தீர்க்கும்.**

***48.*** *அச்சாணி போன்றதோர் சொல்.*

✡ **அன்னை வாழ்வின் அச்சாணி.**

***49.*** *அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமுமா?*

✡ **அடி நாக்கு நஞ்சும், நுனி நாக்கு விஷமும் அன்பருக்கு அமிர்தம் தரும் பலனைத் தரும்.**

***50.*** *அடி நொச்சி, நுனி ஆமணக்கா?*

✡ **அடி எதுவானாலும் நுனி அருளாவது அன்னை பயிர்.**

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வெட்கமின்றிக் கேட்பது உணர்வின் கர்வமாகும். அதை ஏற்பது கண்மூடித்தனமான பாசமாகும்.

***பாசம் வெட்கமில்லாத உணர்வை விரும்பி ஏற்கும்.***

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

281. Pride and Prejudice நாவலில் டார்சி எலிசபெத் மேல் பிரியம் கொள்வதிலிருந்து நல்ல personality கொண்ட பெண்கள் பொருளாதார ரீதியாகத் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் தங்களுடைய personalityயின் பலத்தை வைத்துக்கொண்டு தங்களைவிட பொருளாதார ரீதியாக உயர்ந்த நிலையில் இருக்கும் ஆடவர்களின் கவனத்தைக் கவர்வார்கள் என்று தெரிகிறது.

282. டார்சியை எலிசபெத் உதறி தள்ளுவது நமக்கு அர்த்தமற்றதாகத் தெரியலாம். ஆனால் நாம் அதை அவளுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்க வேண்டும். சகோதரியின் மேல் அவள் வைத்திருந்த பிரியத்தை பார்க்கும்பொழுது சகோதரியின் சந்தோஷத்தைக் கெடுத்த டார்சியை உதறித் தள்ளுவதுதான் அவளுக்குச் சரி என்றாகிறது.

283. விக்காமுடைய போலியான நன்னடத்தை உண்மையான பர்சனாலிட்டியைப் போலியான பழக்கம் எந்த அளவுக்கு மறைக்கும் என்பதற்கு நல்ல உதாரணமாகிறது.

284. ஐந்து பெண்பிள்ளைகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும்என்ற நிர்ப்பந்தம் எந்த ஒரு தாயாரையும் நிதானம் இழக்கச் செய்துவிடும்என்பது திருமதி. பென்னெட் அவர்களுடைய செயல்பாடுகளிலிருந்து தெரிகிறது.

285. தன்னை எலிசபெத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று காலின்ஸ் வற்புறுத்துவது தன்னைப் பற்றி தானே உயர்ந்த அபிப்பிராயம் கொண்டவர்கள் மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று அறியாமல் இருப்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

286. எலிசபெத் வேண்டாம்என்று உதறித் தள்ளிய காலின்ஸை சார்லெட் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறாள். அவரவர் செய்தது அவரவர் கண்ணோட்டத்திலிருந்து சரி.

287. லிடியா வீட்டை விட்டு ஓடியது அவளுடைய குடும்பத்தில் நிகழ்ந்த பெரிய அசம்பாவிதமாகும். ஆனால் அந்த அசம்பாவிதத்தின் மூலம்தான் டார்சியின் பெருந்தன்மை வெளிப்பட்டு, அதன் பலனாக எலிசபெத்திற்கு அவன்மேல் பிரியம் வந்தது. ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் விழிப்புணர்வு இல்லாமல் இருக்கும்பொழுது அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை இப்படிப்பட்ட அசம்பாவிதங்களை வரவழைக்கிறது.



288. டார்சியின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப கரோலின் பிங்கிளி எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் வீணாகி, டார்சி மேலும் மேலும் எலிசபெத்தை நெருங்கும்படிச் செய்கிறது. ஒருவருடைய நிலைமை தாழ்ந்து இருக்கும்பொழுது நிலைமையை மீறிய செயல்பாடுகள் எதிரான பலன்களையே தரும்.

289. லிடியாவை வெளியூருக்கு அனுப்ப வேண்டாம்என்று எலிசபெத் கொடுத்த எச்சரிக்கையை பென்னெட் உதாசீனம் செய்கிறார். உதாசீனம் செய்யும்பொழுது வாழ்க்கை நடுராத்திரியில் எச்சரிக்கை வழங்குகிறது. ஆரம்ப எச்சரிக்கைகளை நாம் உதாசீனம் செய்யும்பொழுது வாழ்க்கை இப்படிக் கடுமையாக நடவடிக்கை எடுப்பதுண்டு.

290. திருமதி. பென்னட்டினுடைய கட்டுப்பாடில்லாத நடத்தையும், தந்திரங்களை கடைப்பிடிக்கும் பழக்கமும், லிடியா வீட்டைவிட்டு ஓடுவதில் போய் முடிகிறது. சிறு தவறுகளை வாழ்க்கை மன்னித்துவிடும். ஆனால் மகளின் தவறான மனப்போக்கை கண்டிக்கவேண்டிய தாயார் கண்டிக்காமல் அதை ஆதரிப்பதென்பது விபரீதத்தில்தான் முடியும்.

291. ஜேனும், பிங்கிளியும் திருமணம் செய்துகொள்வது தடைப்பட்டு தாமதமாகித்தான் நடக்கிறது. அவர்களுடைய சமூக அந்தஸ்த்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளே இதற்குக் காரணம். இருவரும் சம அந்தஸ்த்தில் இருந்திருந்தால் டார்சியால் குறுக்கிட்டிருக்க முடியாது.

292. ஜார்ஜியானாவுடன் ஓடிப்போக வேண்டுமென்று விக்காம் போடுகின்ற திட்டம் டார்சியின் உஷார் நடவடிக்கைகளால் கெட்டுப்போகிறது. ஆனால் லிடியாவுடன் போடுகின்ற திட்டம் பலிக்கிறது. இதற்குக் காரணம் லிடியாவின் தகப்பனாருடைய அஜாக்கிரதைதான்.

293. விக்காமினுடைய கடனையெல்லாம் டார்சி தீர்ப்பதால் அவன் முறைப்படி லிடியாவைத் திருமணம் செய்துகொள்கிறான். டார்சி கடனையெல்லாம் அடைக்காமல் இருந்திருந்தால் விக்காம் லிடியாவை நடுத்தெருவில் விட்டுவிட்டுப் போயிருப்பான். இதிலிருந்து மனிதர்களுடைய செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த பணம் எந்த அளவுக்கு உதவுகிறது என்று தெரிகிறது.

294. கேத்ரின் டீபெர்க் எலிசபெத்தைத் தேடிவந்து திட்டுவதுஎன்று ஒரு நிகழ்ச்சி கதையில் இருக்கிறது. எலிசபெத்தைத் தன்னிடத்திற்கு அழைக்காமல் தான் அவளிடத்திற்குச் சென்று சந்திப்பதுஎன்பது பிரபு வம்சத்தினுடைய அதிகாரம் குறைந்துவருவதைக் காட்டுகிறது.

295. பெம்பர்லி மாளிகையைப் பார்ப்பதும் டார்சியின் வீட்டுப் பணிப்பெண் சொல்லிய வார்த்தைகளும் எலிசபெத்திற்கு டார்சியின் மேலிருந்த அபிப்பிராயத்தை நல்லவிதமாக மாற்றின. ஓர் ஊழியருடைய மகனால் வந்த பிரச்சினை இன்னொரு விசுவாசமான ஊழியருடைய பேச்சால் தீர்கிறது. சூழ்நிலை டார்சிக்குச் சாதகமாக மாறுவதை இது காட்டுகிறது.

296. நல்லெண்ணம் ஐஸ்வர்யத்தை கொண்டு வருகிறதுஎன்பது எலிசபெத் பெம்பர்லி மாளிகைக்கு எஜமானியாவதிலிருந்தும் சார்லெட்டிற்கு விரும்பிய வரன் கிடைத்ததிலிருந்தும் தெரிகிறது. எலிசபெத்திற்குத் தன்னுடைய சகோதரி மேல் நிறைய நல்லெண்ணம் இருந்தது. சார்லெட்டிற்கு பென்னெட் சகோதரிகள் இருவர் பேரிலும் நல்லெண்ணம் இருந்தது.

297. டார்சியின்அத்தை மேடம்டிபெர்க் டார்சிக்கு எலிசபெத் மேலிருந்த பிரியத்தைக் கண்டித்துப் பேசியபொழுது அவர்கள் விரும்பிய பலனுக்கு எதிர்மாறாக டார்சியைத் திருமணம் செய்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது என்று எலிசபெத்திற்குத் தெரியவந்தது. நெகடிவ் பர்சனாலிட்டி உள்ளவர்கள் இம்மாதிரி சில நேரங்களில் நல்ல விளைவுகளுக்கும் காரணமாவார்கள்.

298. திருமதி. பென்னெட்டிற்கு அவருடைய இளவயதில் ஒரு ராணுவ வீரர் மேல் வந்த மோகம் அவருடைய மகள் வாழ்க்கையில் பூர்த்தியாயிற்று. தாயார் கட்டுப்படுத்தி வைத்திருந்த ஓர் ஆசை மகள் வாழ்க்கையில் பூர்த்தியாவதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

299. டார்சி மற்றும் எலிசபெத் இருவருமே ஒரே சமயத்தில் மனமாற்றத்தைக் கொண்டுவருவதால் இருவரிடையே இறுதியில் சுமுகம் பிறக்கிறது. மனமாற்றத்தில் வெற்றி காண்பதால் இருவரும் sincereஆனவர்கள் என்று நாம் சொல்லலாம்.

300. டார்சியின் சம்மதம் கிடைத்த பிறகுதான் பிங்கிளியால் ஜேனைத் திருமணம் செய்துகொள்ள முடிந்தது. திருமணத்தைத் தடுத்து நிறுத்தியவரே டார்சி என்பதால், டார்சி வழிவிட்ட பிறகுதான் திருமணமும் நடக்கிறது.

*தொடரும்.....*

❀ ❀ ❀





## திருவுருமாற்றத்திற்கு ஆன்மீக அறிவு (*Spiritual Intelligence*) தேவை.

புலன்களுக்குப் புலப்படுவது உணர்வு. புலன்களைக் கடந்து மனத்திற்குப் புலப்படுவது அறிவு. ஒரு பழம் ருசியாக இருக்கிறது, சப்பென இருக்கிறதுஎன்பது உணர்வு. ஆரோக்கியத்திற்கு இப்பழம் உதவும் அல்லது உதவாதுஎன்பதை எந்தப் புலனும் கூறாது. அதை மனம் மட்டுமே அறியும். அது அறிவு. அறிவு பல வகையின. உடலுக்குரிய அறிவும், உணர்வுக்குரிய அறிவும், மனத்திற்குரிய அறிவும், ஆன்மாவுக்குரிய அறிவும் வேறுபடும். மனிதர்களையறிவது உணர்வுக்குரிய அறிவு. பொருள்களை அறிவது உடலுக்குரிய அறிவு. கருத்து விளங்குவது, மனத்தின் அறிவு. ஆன்மாவுக்குரிய அறிவு என்பது உடல், உயிர், மனம் அறிய முடியாதது. வெளியூர் போகிறோம். ஒரு பார்க்குக்கு வந்தால் அங்கு அமைதி தழுவுகிறது. அது சப்தமற்ற அமைதியில்லை; மௌனமான அமைதி. அதன் விசேஷம் புரிகிறது, என்னவென்று புரியவில்லை; விசாரித்தால் அந்தப் பார்க்கின் வட எல்லையில் ஒரு மகானின் சமாதியிருப்பதாக அறிகிறோம். அது ஆன்மீக அறிவு.

நாம் மேற்கொள்ளும் வேலைகளுக்கு இலக்குண்டு. பரீட்சை எழுதினால் பாஸ் செய்யவேண்டும். கேஸ் நடத்தினால் ஜெயிக்க வேண்டும். முதலீடு செய்தால் இலாபம் பெறவேண்டும். எந்த வேலைக்கும் ஓர் இலக்குண்டு. **யோகத்தை மேற்கொண்டவனுக்கு எல்லா வேலைகளிலும் உள்ள ஒரே இலக்கு, திருவுருமாற்றம்.** அவன் பரீட்சை எழுதினால் பாஸ் செய்வதைவிட அவன் சுபாவம் மாற வேண்டும். பொதுவாக அவசரப்படும்குணம் உள்ள அவன் பரீட்சையை அவசரமின்றி எழுதினால் அது திருவுருமாற்றம். அதன் வழி எல்லாப்

பாடங்களிலும் அதிகமார்க் வரும். கேஸ் நடத்துபவன் கேஸுக்குத் தகுந்தாற்போல் எந்தப் பொய்யையும் சொல்லும் குணம் உடையவனெனில், அவன் திருவுருமாற்றத்தை நாடினால், கேஸ் ஜெயிப்பதைவிட கேஸ் மூலமாக பொய்யைவிட்டு மெய்யை நாட வேண்டும்.

- ✡ **இந்த யோகம் திருவுருமாற்றத்தால் பூர்த்தியாகிறது.**
- ✡ **திருவுருமாற்றத்திற்கு ஆன்மீகஅறிவு தேவை.**

## ஆன்மீகஅறிவு

நிகழ்ச்சிகள் நமக்குரிய செய்திகளைச் சொல்கின்றனஎன்பது ஆன்மீகஅறிவு. பெருமுயற்சி செய்து பல மாதங்களாகத் தயாரித்த விழா சிறப்பாகப் பூர்த்தியாகும் நேரத்தில், நடத்துபவர் கார் லாரி மீது மோதி சேதம் ஏற்பட்டது. இத்தடை 'விழாவைக் கைவிடு' எனப் புரிந்துகொள்ளலாம். பொறாமை நிறைந்த சூழலில் விழா நடக்க இருப்பதால், லாரி பொறாமைக்காரரது என்பதால், அன்பர் "இந்த சேதம் பொறாமையின் எதிர்ப்பு அழிந்ததைக் காட்டுகிறது" என்கிறார். அவர் கணக்குப்படி அன்றும், அடுத்த பெரிய நாளிலும் விழா சிறப்பாக நடந்தேறியது. தொடர்ந்தும் அதன் சிறப்பு 12 மாதம் விளங்கியது. *நிகழ்ச்சிகள் கூறுவதை அறிவது ஆன்மீகஅறிவு.*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எல்லாம் ஒன்றில், ஒன்றில் எல்லாம்என்று ஆயிரம் மையங்கள் ஏற்பட்டால், முறை போய் சுதந்திரம் வரும்.

***ஆயிரம் மையங்கள் ஏற்பட்டால் முறை போய் சுதந்திரம் வரும்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**925) சில்லரை சந்தோஷத்தைத் தேடுபவரை நிதானமான மனிதன் குறைவாக நினைக்கிறான். பக்குவமான நிதானமுள்ளவனுடைய மனம் புண்பட்டபொழுது உள்ளேயுள்ள கருணை அதைக் கரைக்கும்என்றறியாது, ரணத்தை ஆற்றும் மனிதாபிமானத்தை நாடி மனிதாபிமானத்தையே நிலைநிறுத்துகிறான்.**

***பெரிய மனிதனும் மனம் புண்பட்டபொழுது சிறிய மனிதனாகிறான்.***

ஒரு பெரிய மிராசுதாரின் மகன் P.U.C. பெயிலாகிவிட்டான். எந்த டியூட்டோரியல் பிரபலமானதுஎன விசாரித்து, அதில் சேர்த்தார். பையன் 4முறை பரீட்சை எழுதி, தவறிவிட்டான். அவனை கிராமத்திற்கு அழைத்துப் போய் விவசாயம் செய்யச் சென்னார். அவர் உறவினர்களைப் பார்க்கப் போயிருந்தார். அந்த வீட்டில் எவரும் பள்ளியைத் தாண்டியதில்லை. ஒருவர் 2 வருஷம் காலேஜில் படித்தவர். அந்த வீட்டுப் பையன் ஒருவனை நண்பர் ஒருவர் அழைத்துப் போய் வீட்டில் வைத்திருந்தார். அவர் அவனுக்கு பரீட்சைக்குரிய பாடம் சொல்லிக் கொடுத்ததில்லை. 'பாடம் என்றால் என்ன? படிப்பு ஏன் முக்கியம்?' என்பதை அவன் மனதில் பதியும்படிக் கூறினார். பையன் பெரிய பட்டம் முடித்தான். அதைக் கேள்விப்பட்ட மிராசுதார் அந்த நண்பனைத் தேடிவந்து பையனை அவரிடம் ஒப்படைத்தார். பையனை அவர் வேறு ஒருவரிடம் பொறுப்புக் காட்டினார். "நோட்ஸ் படிக்கக் கூடாது. பாடப்புத்தகம் மட்டும் படிக்க வேண்டும்" என்பது பயிற்சி. P.U.C. பாஸ் செய்தான். B.Sc. பாஸ் செய்தான். M.Sc.யும் பாஸ் செய்தான்.

கல்லூரி மாணவர் ஹாஸ்டலில் பரீட்சை சமயத்தில் எல்லா மாணவர்களும் நோட்ஸ் படிப்பார்கள். சில மாணவர்கள் பாடப்புத்தகமே வாங்குவதில்லை.

- ✡ நோட்ஸ் அறிவுக்கு எதிரி.
- ✡ பாடப்புத்தகம் அறிவின் உறைவிடம்.

எந்தக் கல்லூரியிலும் இந்தக் கருத்துகள் எந்தக் காலத்திலும் எடுபடுவதில்லை.

- ✡ **சில்லரை சந்தோஷம், சந்தோஷத்திற்கு எதிரி.**
- ✡ **உள்ளேயுள்ள கருணை, நிதானம் சந்தோஷத்தின் உறைவிடம்.**

பொதுவாக இது புரியாத கருத்து. எவரும் பின்பற்றத் தயார் இல்லை. நிதானம் உள்ளவரே நேரம் வந்தால் உள்ளே போவதில்லை. எளிய பரிகாரத்தைத் தேடுகிறான்.

- ✡ **சில்லரையாக இருப்பது எளிது.**
- ✡ **நிதானமாக இருப்பது சிரமம்.**

**நிதானம் நித்திய தியானம்.**

பொறுக்காது. மாநிலத்தில் முதல் மார்க் வாங்கியபின், அதைத் திருத்தி அடுத்தவருக்குக் கொடுப்பது பாவம். அது தினமும் நடப்பது; மனம் ரணமாகும். இந்த நேரம் மனிதன் வேண்டியவரிடம் ஆறுதல் தேடுவான். **நண்பர் நல்லவராக இருந்து ஆறுதல் தந்தால், ஆறுதல் பெறுவதால், அப்பிரச்சினை தீராதுஎன மனிதன் அறிவதில்லை.** ஆறுதல் இதமாக இருக்கும். ஆறுதலை நாடுவதற்குப் பதிலாக உள்ளே சென்றால், உள்ளே கருணையுண்டு. அதையும் கடந்து சென்றால் கருணை வெள்ளமாக உள்ளது. அது மனத்தின் ரணத்தைக் கரைத்துவிடும். அத்துடன் அதை ஏற்படுத்திய பிரச்சினையை அழிக்கும். இழந்த முதல் ராங்க் திரும்ப வரும்.



- ✡ **உள்ளே போகத் தோன்றாது; முயன்றால் முடியாது.**
- ✡ **பொறுமையாக உள்ளே போவது ஆண்டவனை நாடுவதாகும்.**
- ✡ **அதன் மூலம் நிதானம் கருணையாக மாறும். கருணை அருளுக்கு அடுத்தபடியான அம்சம்.**

❀ ❀ ❀

**926) மனிதத் திறமைக்கு முழுப்பலன் சந்தோஷம் பொங்கி வழியும்பொழுதுதான் கிடைக்கும். மனச்சாட்சியின் தயக்கமிருக்கும்வரை பொங்கி வரும் சந்தோஷத்திற்கு அது தடைசெய்யும்.**

*பெரிய சந்தோஷத்திற்கு மனச்சாட்சி தடை.*

- ✡ திறமைக்குப் பலன் உண்டு.
- ✡ ஆனால் முழுப்பலன் பெற பல்வேறு விஷயங்கள் ஒத்துவர வேண்டும்.
- ✡ சந்தர்ப்பம், சூழலின் ஒத்துழைப்பு, பலன் பெறுபவரின் நன்றியறிதல், பலன் எழும் நேரம், செய்பவரின் நல்லெண்ணம்போன்று பல காரியங்கள் ஒத்துவருதல் அவசியம்.
- ✡ **இவை ஒத்து சுமுகமாக வருவதற்கும் பல தரங்களுண்டு. அனைத்தும் சரிவர இருந்தால்தான் சந்தோஷம் பொங்கி வரும்.**
- ✡ அப்படி நடக்க பல அடையாளங்களுண்டு.
  எதிர்பார்த்ததைவிட அதிகப் பலன் எழுவது,
  குறித்த நேரத்திற்குமுன் பலன் வருவது,
  வந்த பலன் வளரும்அறிகுறி தெரிவது போன்றவை அவ்வடை-யாளங்கள்.
- ✡ அதைத் தடை செய்பவை பல.
  எக்காரணத்தை முன்னிட்டும் எழும் தயக்கம்,
  தெளிவில்லாத மனம்,

வேறு விஷயத்தில் உள்ள குறை மனத்திலிருப்பது,
எது காரணமானாலும் மனம் சுருங்குவது பொங்கிவரும் சந்தோஷத்தைத் தடை செய்யும்.
கூச்சம், பயம், அனுபவமின்மை, எதுவும் அப்படிச் செயல்படும்.

✡ பெரிய பலன் வருவது நமக்கு மேலுள்ள சீனியர்களைக் கடந்து வந்தால் மனச்சாட்சி உறுத்தும்.
பல காரணங்கட்காக மனச்சாட்சி உறுத்தும், தயங்கும்.
பெரிய பாராட்டுவிழா நடப்பது நமக்காகஎன்றாலும், அந்தத் தேதி நம் வாழ்வில் தவறான நாளென்றால், மனம் சுருங்கும்.

✡ உடல், பொருள், ஆவிஎன்பது வழக்கு.
உடல் பூரித்து, பொருள் பெருகி, ஆவி மலர்ந்தால் சந்தோஷம் பொங்கிவரும்.
அதில் குறை மிகச் சிறியதுஎனினும் அதற்கு அனுமதியில்லை. பொங்கிவரும் பாலில் ஒரு சொட்டு நீரும் பொங்குவதை அடக்கும்.

✡ பொங்கி வரும் சந்தோஷம், புளகாங்கிதம் தரும்.
அது உண்மையானால், எதிர்காலம் முழுவதும் ஏற்றமாக இருக்கும்.
வெற்றியாகப் பதவி வரும், பணம் வரும், வேலை முடியும்.
இவை பெரிய சந்தோஷம் தரும்.
**வெற்றியாக அன்பு கிடைப்பதுண்டு.**
**வலிமையான அன்பு, உயர்ந்ததுஎன்பதால் அது பதவி, பணம், வேலையை முடித்துக்கொண்டு வரும். அந்நிலையில் அன்பை உணர்ந்து அடுத்தவை நினைவிலில்லைஎனில் பொங்கி வரும் சந்தோஷம் பூரித்து புளகாங்கிதம் தரும்.**

❀ ❀ ❀

**927) பஞ்சத்தைப் பற்றிய கருத்துக்கு A.K. சென்னுக்கு உலகப் புகழ் கிடைத்தது. மானேஜ்மெண்ட் தத்துவத்தில் ஒன்றை உணவு விநியோகத்திற்குப் பயன்படுத்தியதன்**



**பலன் அது. பரம்பரைக் கருத்தை அடுத்த துறைக்குப் பயன்படுத்துவதை உயர்ந்த சிருஷ்டி ஞானம் (creativity) என்று உலகம் கருதுகிறது. பல ஆயிரம் கருத்துகள் அதுபோன்றுள்ளன.**

***துறை மாறினால் சிறியதும் பெரும்பலன் தரும்.***

✡ நாட்டுக்கோட்டை செட்டியார் ஒரு சிறு தொகை. 1947இல் அவர்கள் ஜனத்தொகை 1¼ இலட்சம். இப்பொழுது 5 இலட்சத்திற்கு மேலிருக்க முடியாது. 1947இல் தமிழ்நாட்டுத் தொழிலில் 1/3 அவர்களிடமிருந்தது. அது பெருஞ்செல்வம் படைத்த வம்சம். அதற்குரிய முக்கிய காரணம் - பயிற்சி.
எந்தத் தொழிலையும் கற்க 15 வருஷமாகும். அதுவும் பகுதியாகவே பயிலலாம். பயிற்சி முழுமையாக சில ஆண்டுகளில் அப்பலன் தரும். **தானே கற்பதைவிட பயிற்சி பலன் தரும்என்பது மானேஜ்மெண்ட் சட்டம்.**

✡ கலைஞர் பலருண்டு. அரசியல் தொடர்பு கலைக்கு இல்லாத பிரபலத்தைக் கொடுக்கும். அதனால் பதவிக்கும் வருவதுண்டு.

✡ இருதுறைகள் சேரும்பொழுது பலன் அதிகம்என்பது பொருளாதாரமும், கணிதமும் கண்டுகொண்டன.
காபி, டீ எஸ்டேட்களில் 10% இலாபம் வருவது அதிகம். டாட்டா 50,000 ஏக்கர் எஸ்டேட் வாங்கி மானேஜ்மெண்ட் தத்துவப்படி அவற்றை நிர்வாகம் செய்ததில் 50% இலாபம் கிடைத்தது.

✡ நம் நாட்டில் 60 கோடி பேர் விவசாயம் செய்கிறார்கள்.
அமெரிக்காவில் 1900த்தில் 15 கோடி பேர் விவசாயம் செய்தனர்.
விவசாயத்தை டெக்னாலஜியைப் பயன்படுத்தி செய்ததால் அதே விவசாயத்தை இன்று 60 இலட்சம் பேர் செய்கிறார்கள். பலன் ஏராளம்.

✡ மானேஜ்மெண்ட் தத்துவங்கள் ஏராளம், எல்லோரும் அறிந்தது. ஆனால் எவரும் அடுத்த துறைக்கு அதைப் பயன்படுத்துவதில்லை. அவற்றுள் சில:

1. திட்டமிட்டு வேலை செய்தல் (Planning).

2. Cost accountancy ஒவ்வொரு செயலுக்கும் செலவைக் கணக்கிடுதல்.
3. சம்பளம் கச்சாப்பொருள், விளம்பரம் போன்றவற்றைச் செலாவணியில் என்ன சதவீதமாகிறதுஎனக் கணக்கிடுதல்.
4. எதையும் ஒரு system மூலமாகச் செய்வது.
5. Organisational Chart எந்த வேலைக்கு யார் பொறுப்புஎன நிர்ணயிப்பது.
6. வரவு, செலவு கணக்கெழுதுவது.
7. எல்லாத் துறைகளும் ஒவ்வொரு துறையுடன் ஒத்துழைப்பது.

பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு மானேஜ்மெண்ட் தத்துவமே காரணம். எவரும் தம் குடும்ப வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் அவற்றைப் பயன்படுத்தினால் பலன் அதிகம். A.K. Sen நோபல் பரிசு பெற உதவியது இது போன்ற ஒரு தத்துவம்.

❀ ❀ ❀

*தொடரும்.....*

### ஜீவிய மணி

**அறியாமைக்கும் அருளுண்டு.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜடமான மனிதன் தன் கண்ணோட்டத்தை மாற்றினால், ஜடம் திருவுருமாற்றமடைகிறது. அந்நேரம் பிரம்மமும் சிருஷ்டியும் ஒன்றென அறிகிறோம்.

***சிருஷ்டியை பிரம்மமாக்கும் திருவுருமாற்றம்.***





# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

''சத்தியத்தை மட்டுமே உயிர்என்று ஏற்பதன் மூலமாக அன்னையை நம் உள்ளமெனும் கோயிலில் பிரதிஷ்டை செய்யலாம்'' என்று அன்னையை ஏற்றுக்கொள்வதென்றால் எப்படிஎன்பதற்கு விளக்கம் கொடுக்க மல்லிகை ஆரம்பித்தாள். எல்லோருடைய கவனமும் அவள் மீது திரும்பியது. தென்னரசுவின் முகம் காணக் கிடைக்காத பூலோகச் சொர்க்கம் இதுதான் என்பதைப்போல் மலர்ச்சியுடன் ஒரே ஒரு வினாடிகூட அகலாது, அணையாது நிமிர்ந்து நிற்கின்ற தீபத்தின் சுடரென பிரகாசம் அடைந்தது.

''மனம், உணர்வு, உடல்என்ற மூன்று நிலைகளிலும் சத்தியம் என்பதே உயிர்மூச்சாக இருந்தால் மட்டுமே இக்கோயிலை ஆரம்பிக்க முடியும். நம் நம்பிக்கையென்பது திறமை, சுபாவம், முயற்சி, குடும்பம், சமூகம்என்பதை அடிப்படையாகக் கொண்டது. இந்த அடிப்படையி-லிருந்து விலகி, அன்னையை அந்த இடத்தில் ஏற்க வேண்டும். அன்னை, பகவான் சொல்லியிருக்கின்ற விஷயங்களை வேதவாக்காக மதிக்க வேண்டும். அவர்கள் இருவரும் சொல்லாத விஷயங்களே இல்லை.

இப்படிப்பட்ட அன்னையை முதல் கட்டத்தில் ஏற்றுக்கொண்டு இருக்கிறோமென்றால் நமக்கு வாழ்க்கை பிரச்சினை இல்லாததாக மாற வேண்டும். இதுதான் நாம் ஏற்றுக்கொண்டிருப்பதன் அடையாளம் ஆகும். அடுத்தடுத்த கட்டங்களில், சந்தோஷம் என்றுமே அகலாது நம்மைத் தொடர்ந்துகொண்டே இருக்கவேண்டும், தோல்வியை அறியாத வாழ்க்கையை பார்க்கவேண்டும்.

முதலில் எல்லோருமே அன்னையைத் தெய்வமாக ஏற்று வழிபட ஆரம்பித்தாலும், சிறிது சிறிதாக நம் முழு வாழ்வையும் அன்னையிடம் முழுமையாக, பூரணமாக ஒப்படைக்கவேண்டும்.

நடந்ததை, கேட்டதை, நடக்கப்போவதை அன்னையிடம் ஒப்படைப்பதன் மூலமாக காலத்திலிருந்து நகர்ந்து, காலத்தைக் கடந்து, காலத்துள் வாழ்ந்தாலும் காலத்தில் காலத்தை விலக்கி செயல்படுவதன் காரணமாக நிம்மதியாக, நிதானமாக, 'ஆட்டம் அவனே, ஆட்டுவிப்பவனும் அவனே, அரங்கமும் அவனுடையதே' என்ற உண்மையை ஒவ்வொரு நிகழ்விலும் பார்ப்பதே நம்முடைய எண்ணம், உணர்வு, உடல், ஆன்மாவென்கின்ற ஜீவனின் சிகரத்தில் அன்னையை ஏற்பதாகும். அன்னை விரும்புகின்ற, அன்னையாக மாறுகின்ற நிலை இறுதி கட்டமென்றாலும் அவரவர்க்கேற்ற நிலையிலும் அன்னையை ஏற்கலாம்.

அன்னை மட்டுமே முடிவு. அவர் காட்டும் வழியைப் பார்த்து தெளிந்து, அதன்படி விழிப்பாக நடப்பது ஒரு நிலை.

நம் குறை, இருள், பாவம், கர்மம், குணக்கேடுகள், சுபாவம், தர்மம், இவைகளை எந்தெந்த அளவில் புறக்கணித்து வாழ்க்கையில் செயல்படுகின்றோமோ அந்தந்த நிலையில் அன்னையை ஏற்று வாழ்வை நடத்தலாம்.

சுருக்கமாகச் சொன்னால்,

நம்மை நம்பாமல், நம் திறமையை, செல்வத்தை, செல்வாக்கை, குடும்பத்தை, சமுதாயத்தை ஏற்காமல், அன்னையை மட்டுமே நம்பி, 'அவர் காட்டும் வழியே என் வழி'யென அவ்வழியில் நடப்பதே அன்னையை முழுமையாக வாழ்க்கையில் ஏற்பதாகும்'' என்று முடித்தாள்.

''எவரெஸ்ட் சிகரத்தை கன்னியாகுமரியில் நின்று பார்க்க முயல்வதுபோன்றுதான் நானிருக்கிறேன்'' என்றார் முகுந்தன்.

''அன்னையை ஏற்பதென்பது ஆகாயத்தில் நடப்பதுபோலஎன்று எப்பொழுதோ படித்ததாக நினைவு'' என்ற ரோஜா, ''எது எப்படி இருந்தாலும் அன்னை நம்மை ஏற்றுக்கொண்டிருப்பதால் ஏதோ ஒரு நிலையில் நானும் அன்னையை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். சத்தியத்தை, பெரிய விஷயங்களில் எல்லாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். சின்னஞ்சிறு விஷயங்களில் மட்டும் நழுவிவிடுகின்றது. விஷயம் முடிந்தபிறகு, அதாவது கோணலாகும்பொழுதுதான் புரிகிறது



என் சௌகரியத்திற்கு நடந்துகொண்டிருக்கிறேன்என்று. நிச்சயமாக எனக்கு நம்பிக்கையிருக்கிறது, அவர்கள் கையைப் பிடித்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் அதிலிருந்து விலகாமல் இருக்க வேண்டிய முயற்சியை எடுக்கவேண்டியது என்னுடைய பொறுப்பு என்பது தெளிவாகத் தெரிகிறது'' என்றாள்.

தென்னரசுவின் சிந்தனை எங்கோ சென்றிருக்கிறதுஎன்பது மட்டும் புரிந்தது. அவன் ஒன்றுமே பேசாமல் மல்லிகைக்கு ஒரு நமஸ்காரம் செய்தான். ''உங்களிடம் சரணடைந்துவிட்டேன். இனி என்னை மேலே தூக்கிவிடுவது உங்கள் பொறுப்பு. என் குறைகளை உங்களிடம் விடுகின்றேன். குறையோ, நிறையோ, கர்மமோ, பாவமோ, சுபாவமோ, தர்மமோ, எதுவாக இருந்தாலும் உங்கள் காலடியில் போட்டு விடுகின்றேன். என்னை எது செய்தாலும் அது என்னுடைய பாக்கியம். நீங்கள் என்னை எப்படிக் கையாள வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படிச் செய்துக்கொள்ளுங்கள். எனக்கு, என்னுடைய வளர்ச்சிக்கு என்ன வேண்டும்என்பது என்னைவிட உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும். நான், நீங்கள் வரும்பொழுதெல்லாம், என்னை நோக்கி பார்க்கும்பொழுதெல்லாம் விழிப்புடன் மட்டுமே இருக்கவேண்டும். கண்மூடியாக இருளில் மூழ்கிவிடக்கூடாது. என்னில் உங்களை எப்பொழுதும் காணும் பாக்கியத்தை என்றென்றும் எனக்குத் தந்து அருளுங்கள்'', இதை பிரார்த்தனையாக அவன் செய்யவில்லை; குழந்தையாக நின்று பிதற்றினான். அவன் கேட்பதன் விவரம் அவனுக்கே முழுமையாகப் புரியவில்லை என்றாலும் கேட்டது நிச்சயமாகக் கிடைக்கும்என்ற பரிபூரண நம்பிக்கையில் இருந்தான். மனதின் சத்திய ஒளி தனக்குத் துணையாக நின்று வழிகாட்டி அழைத்துச் செல்லும்என்று நம்பினான். வாழ்க்கை என்பது கணக்குப் போடுவதுபோன்றது. முறை சரியாக தெரிந்து வாழ்ந்தால் விடையும் சரியாகவரும். எந்தக் காயை எப்படி நகர்த்தினால் வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும்என்று தெரிந்து செயல்பட்டால் நம் வழிக்கு வாழ்க்கையைக் கொண்டு வர முடியும். வாழ்க்கையின் பிடியில் சிக்கித் தவிக்காமல், நம் பிடியில் வாழ்க்கையைக் கொண்டு வந்தால், கையிலுள்ள பிடியை அன்னையிடம் ஒப்படைப்பதென்பது மிகமிகச் சுலபம். பிடியை

வாழ்க்கையின்கையில் விடக்கூடாதுஎன்பதை தென்னரசு புரிந்து கொண்டான்.

✡✡✡

தென்னரசு தனக்கு வந்திருக்கின்ற e-mails பார்த்துக் கொண்டிருந்தான். உடனடியாகக் கவனிக்க வேண்டியதென வந்திருந்ததில் முதலாவதை 'கிளிக்' செய்தவனின் முகம் அதை படிக்கப் படிக்க விசாலமாகிக்கொண்டே சென்றது.

''மல்லிகை, உங்களிடம் பேச வேண்டுமே, இப்பொழுது முடியுமா?'' என்று கைதொலைபேசியில் கேட்டான்.

''சொல்லுங்கள் தென்னரசு''.

''என்னை கம்பெனியின் World Vice-Presidentஆகத் தேர்ந்தெடுக்கிறார்கள்''.

''மிக்க சந்தோஷம்''.

''இதற்குக் காரணம் அன்னைதான். மூன்று மாதங்களுக்கு முன் நீங்கள் அன்னையை ஏற்றுக்கொள்வது எப்படிஎன்று சொன்னீர்கள் அல்லவா, நினைவிருக்கிறதா?''

''நிச்சயமாக, சொல்லுங்கள்''.

''எனக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் இருக்கின்ற நம்பிக்கைகள் எல்லாவற்றையும் தொகுத்தேன். அதைப்பற்றி அன்னையும், பகவானும் என்னென்ன சொல்லியிருக்கின்றார்கள் என்பவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் சேர்த்து, அவற்றையெல்லாம் என் நம்பிக்கைக்கு நேராக வைத்தேன். ஒவ்வொன்றாக நிதானமாக மாற்ற முயன்றேன். என்னுடைய அடிப்படையான குணம் ஒன்றையும் இவ்வழியில் திருவுருமாற்றம் செய்தேன். அதனுடைய நல்விளைவுதான் இந்தப் பதவிஉயர்வு. என்னுடைய நிலையில் இது கிடைக்கவே கிடைக்காதஒன்று. நான் நினைத்துக்கூட பார்க்க இயலாதது. என் தகுதிக்கு இது நிச்சயமாகக் கிடைக்கவில்லை. இதற்காக எந்தவொரு முயற்சியும் விசேஷமாகச் செய்யவும் இல்லை. வழக்கமாக வேலையென்று செய்யாமல், இதில் அன்னையை எப்படிக் கொண்டு வர முடியும்என்பதை மட்டும் நினைவாக யோசித்து செயல்பட்டேன். அன்னையை நினைவாக (conscious) நினைக்க ஆரம்பித்தேன்.



உங்களுக்குத் தெரியுமா! என்னுடைய மாத வருமானம் இனிமேல் இருபத்தி ஐந்து இலட்சம். அள்ளிக் கொடுப்பவர் அன்னையென்பதை ஏற்றுக்கொண்டாலும், அள்ளவே முடியாத அளவிற்குக் கொடுப்பவர் என்பதைப் பார்க்கின்றேன்'', உணர்ச்சி வேகம் கரைபுரண்டு ஓடினாலும் சொல்ல நினைத்ததைக் கோவையாக, ஆனால் சிந்திக்காமல், தோன்றியதை அப்படியே பேசினான்.

✡✡✡

ஞாயிற்றுக்கிழமை. மல்லிகையும், முல்லையும் செஸ் (chess) விளையாடிக்கொண்டிருந்தார்கள். முல்லையின் ராஜாவுக்கு check வைத்துவிட்டு, மல்லிகை இருவருக்கும் காபிக்காக கிச்சனுக்குள் சென்றாள்.

காலிங்பெல் அடித்தது.

தன் ராஜாவை எப்படிக் காப்பாற்றுவதுஎன்று யோசித்துக் கொண்டே, இந்த நேரத்தில் யார் காலிங்பெல்லை அடிப்பதுஎன்ற கேள்வி மனதில் எழ கதவைத் திறந்தாள் முல்லை.

கை கதவின் மேலேயே இருக்க, எதிரில் நின்ற நபரைப் பார்த்தவுடன் பேசத் தோன்றாமல் திகைத்தாள். ஆனால் கண்கள் மட்டும் படம்பிடித்து உள்ளே அனுப்பியது.

எத்தனை வருடங்கள்! இனி பார்க்கவே கூடாது, பார்க்கவே முடியாது, பார்ப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வாழ்க்கை கொடுக்கக் கூடாது, இனியொரு சந்தர்ப்பம் அமையுமா? என்றெல்லாம் சிந்தனை செய்து, எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுபுள்ளியை வைத்துவிட்டதாக முல்லை நம்பியிருந்தாள். அப்படியில்லைஎன்பதை வெளியில் நின்ற உருவம் எடுத்துக்காட்டியது. யுகாந்த காலமாகப் பிரிந்தவர்போல இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். கண்கள் பேசியதோ இல்லையோ, ஆனால் உள்ளங்கள் மகிழ்ந்தன, மலர்ந்தன, மணம் வீசியது. முதலில் யார் பேசுவதுஎன்பதற்கு இடமே இல்லாமல், தென்னரசு,

''உள்ளே வரலாமா?'' என்று அனுமதி கேட்டான்.

பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் வீடு தேடி வந்தவர்களை 'வாருங்கள்' என்று அழைப்பதுதானே நாகரீகம். முல்லையும் மிக

மெதுவாக, அவளுக்கே அது கேட்டிருக்குமோ தெரியாது, வாய்க்கு உள்ளாகவே ''வாருங்கள்'' என்று அழைத்ததுடன், விலகி நின்று வழி விட்டாள்.

இரு கைகளிலும் நிறைய பைகளை பிடித்துகொண்டு உள்ளே வந்தவுடன் தன் கையிலிருப்பதை சோபாவில் வைத்தான்.

உள்ளேயிருந்து கையில் இரு காபி மக்குடன் வந்த மல்லிகை, தென்னரசுவைப் பார்த்தவுடன்,

''வாருங்கள்! U.S.லிருந்து எப்பொழுது வந்தீர்கள்?''

''நேற்றுதானம்மா'' என்று கைகூப்பி வணங்கினான்.

முல்லை அதைக் கவனித்தாள். மல்லிகை மிக சுதந்திரமாக பேசுவதைப் பார்த்தவுடன் வியப்பேற்பட்டது.

''இந்தாருங்கள்'' என்று சோபாவில் இறக்கி வைத்ததிலிருந்து ஒரு சிறு பையை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு, மற்ற எல்லாவற்றையும் மல்லிகையிடம் கொடுத்தான்.

ஒன்றுமே புரியவில்லை. தென்னரசு மல்லிகையை மரியாதையுடன் அழைக்கிறான். தான் காண்பது கனவா? உண்மையில் வந்திருப்பது தென்னரசுதானா? என்று ஐயத்துடன் முல்லை அவனைக் கவனித்தாள்.

தான் பார்த்துப் பழகிய முகம் போலில்லையே! ஏதோ ஒரு புது முகத்தை பிளாஸ்டிக் சர்ஜரி செய்து மாற்றி வந்திருக்கிறானோ! பிரகாசமான மகிழ்ச்சியானதாக இருக்கிறதே! முன்பைவிட சற்றுச் சதை பிடித்து, பார்ப்பதற்கு இன்னும் சற்று அழகாக இருக்கிறான். உடையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. தான் விரும்பிய, பழகிய தென்னரசு அல்ல இவன்என்று தெளிவாகப் புரிந்தது. 8 வருடங்கள் மிக நீண்ட காலமன்றுஎன்றாலும், முல்லைக்கு 8000 வருடங்கள் போல்தான் இருந்தது. அவனுக்குத் திருமணம் ஆகி இருக்கலாம். அவன் அன்பை பங்கு போட்டுக்கொள்ள துணை ஏற்பட்டிருக்கலாம். ஏன், பாசத்துடன் பழக குழந்தைகள்கூட இருக்கலாம். தன்னைப் போல் தனியாளாய் அவன் இருக்க வேண்டிய அவசியமேயில்லையே. புதிய முகம்போல புதிய உறவுகள். இந்த சமுதாயத்தில் எப்பொழுதுமே ஆணுக்கோர் நீதி, பெண்ணுக்கோர் நீதிதானே செயல்பட்டு வருகிறது.



அவன் தானே விலகினான்என்று சொல்லாமல், அவள் வேண்டாம் என்று மறுத்தாள்என்றுதானே சொல்வான். அவன் செய்தது மன்னிக்க முடியாததாக முல்லையின் கோர்ட்டில் வேண்டுமானால் வாதம் செய்யலாம். தென்னரசுவின் கோர்ட்டில் அவன் குற்றமற்றவன் என்று நம்பிக்கொண்டிருக்கிறானே! எப்படி சகஜமாக உள்ளே வந்து உட்கார முடிகிறது! என்ன உறவிருக்கிறது? மல்லிகையுடன் பேச என்ன தகுதியிருக்கிறது? என்று முல்லையின் மனது பொருமிக் கொண்டிருந்தது.

''அக்காவிற்கென போட்ட காபி, நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நான் அக்காவிற்கு வேறு போட்டு எடுத்து வருகிறேன்'' என்ற மல்லிகைக்கு,

''வேண்டாம்மா, இன்னுமொரு கப் மட்டும் எடுத்து வாருங்கள். நாங்கள் இருவரும் share செய்துகொள்கிறோம், முல்லை விரும்பினால்'', பதிலளித்தான் அரசு.

பையிலிருந்ததைப் பார்த்த மல்லிகை சிறு குழந்தையைப் போல, ''ஹை! சாக்லேட். என்ன கடையையே வாங்கிக்கொண்டு வந்து விட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்று கூறிக்கொண்டே, ''அக்கா, இந்தாருங்கள்'' என இரு சாக்லேட் பார்களை நீட்டினாள். ஒன்றைப் பிரித்து தன் வாயில் போட்டுக்கொண்டே, ''மிகவும் சுவையாக இருக்கிறது, தேங்ஸ் தென்னரசு'' என்று கூறி உள்ளே சென்றாள்.

தங்கை கொடுத்ததை கை வாங்கிக்கொள்ள, அவை விலை உயர்ந்தவை என்பதைப் பார்த்தவுடன் முல்லை புரிந்துகொண்டாள்.

''நாங்கள் உள்ளே வரலாமா?''

''அக்கா! வாருங்கள், வாருங்கள்'' முகமெல்லாம் ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றாள். ''மல்லிகை, இங்கு வந்து பார், நம் வீட்டிற்கு ரோஜாக்காவும் முகுந்தன் சாரும் வந்து இருக்கின்றார்கள். ஸ்வீட் கொண்டு வா. சார், காபி சாப்பிடுங்கள், நான் கொண்டு வருகிறேன்''. ''மல்லிகை பேசிக்கொண்டிரு''. ஒருவித படபடப்புடன், ஏதோவொரு நாடகம் நடக்கின்றது. திட்டமிட்டு வந்து இருக்கின்றார்களா, இல்லை தற்செயலாக நடக்கின்றதா? தென்னரசு இந்த சமயத்தில் வந்திருக்கிறானே, அவனை எப்படி அறிமுகப்படுத்துவது?

ஒன்றும் புரியவில்லை. சந்தோஷம் இருந்தாலும், குழப்பமும் இருந்தது. மூன்று கப் காபி கலந்து டீபாயின் மீது வைத்தாள்.

‘‘மல்லிகை, ஆயிரம் நிறங்களைக் கொண்டவர் அன்னை. என் அன்னைக்கும் ஆயிரம் வர்ணங்களைக் கொண்ட புடவை வாங்க வேண்டுமென்று அரசு நேற்று எங்களை அழைத்துக்கொண்டு சென்று வாங்கினான். உனக்குப் பிடித்திருக்கிறதா?’’

‘‘புடவை வேறு இருக்கின்றதா! நான் சாக்லேட் பையை மட்டும்தான் பிரித்தேன். எனக்கு பிடித்ததைத்தான் அன்னை எனக்கு கொடுப்பார்’’.

‘‘அக்கா, உனக்குத்தான் வாங்கிக்கொண்டு வந்து இருக்க வேண்டும்’’.

‘‘மல்லிகையம்மா! என் அன்னை நீங்கள். உலகத்தில் உள்ள அனைத்தையும் வாங்கி உங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பது தான் என் விருப்பம்’’ என்றான் தென்னரசு. ‘‘முல்லைக்கும் இரண்டு பரிசு பொருள் வாங்கி வந்திருக்கிறேன். ஒன்றை இப்பொழுது கொடுக்கிறேன். இன்னொன்றை.... நான் என் மனதில் உள்ளதை எல்லாம் பேசி முடித்த பிறகு அவள் விரும்பினால் அதற்கு மதிப்புண்டு, இல்லையென்றால் அது கூழாங்கல்தான்’’ கூறிக்கொண்டே, Timond Diamond watchஐ எடுத்து முல்லையிடம் கொடுத்தான்.

‘‘அக்கா, இதன் விலையென்ன தெரியுமா? 20,000 டாலர், ஒரிஜினல் வைரக்கற்கள். தென்னரசு விசேஷமாக Swissஇல் ஆர்டர் செய்து வாங்கியிருப்பார்என நினைக்கிறேன். உன் பெயர் dialஇல் இருக்கின்றது பார்த்தாயா! எவ்வளவு அழகாக இருக்கின்றது!’’. ‘‘என் அக்கா விலை மதிக்கமுடியாத பொக்கிஷம்என்பதை உணர்ந்து கொண்டீர்களா?’’

‘‘ஆமாம் அம்மா! உங்கள் அக்காவால்தான் இன்று அன்னையை அறிந்துகொண்டிருக்கிறேன். நீங்கள்தான் என்னுடைய அன்னை. இதுநாள்வரை என்னால் மறைத்து வைத்திருந்தவற்றையெல்லாம் இனிமேலும் என்னால் சுமக்க முடியாது’’.

‘‘முல்லை, என்னை மன்னித்துவிடு’’ என்று அவளைப் பார்த்து கைகூப்பினான். நான் உனக்குச் செய்ததை இப்பொழுது நினைத்தால்



கூட மனது கூசுகிறது. ஆனால் அன்று எவ்வளவு மோசமாக, அநாகரீகமாகப் பேசினேன். அது இன்னும் உன் மனதில் அப்படியே ரணமாக இருக்கும். கல் தேயும், ஆனால் சொல் தேயாது என்ற பழமொழியுண்டு. நீ உயர்ந்தவள். உன்னால் மன்னிக்க முடியும். தயவுசெய்து என்னை மன்னித்துவிடு. நம் இருவரிடையே நடந்த விஷயத்தை உன் அனுமதியில்லாமல் யாரிடமும் நான் சொல்ல முடியாது. நீ அனுமதித்தால் உங்கள் அனைவர் முன்னும் சொல்கின்றேன். இதில் தவறு செய்தது முழுக்க முழுக்க நான்தான்’’.

‘‘மல்லிகை, நீங்களும் என்னை மன்னிக்க வேண்டும் அம்மா’’ என்று கூறிக்கொண்டே சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான்.

‘‘தென்னரசு, எழுந்திருங்கள். வயதில் பெரியவர்கள் நீங்கள்’’.

‘‘அம்மா! செயலில் மிகக் கீழ்த்தரமானவன், சுயநலவாதி. ஆனால் எனக்குதான் நீங்கள் அன்னையை பற்றிச் சொல்லி, அவர்களை ஏற்கச் செய்ததன் மூலமாக நான் செய்ததை உணரச் செய்ததுடன் அல்லாமல் உங்களிடம் மன்னிப்பு கேட்கும் அளவிற்கு தைரியத்தைக் கொடுத்துள்ளீர்கள். என் தாய் - பெற்ற தாய் - உடலுக்குத்தான் சொந்தம். ஆனால் என் ஆன்மாவிற்கு தாய் அல்லவா நீங்கள்’’.

தென்னரசு பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த முல்லை, உண்மையிலேயே அவன் மாறிவிட்டான்என்பதை உணர்ந்து கொண்டாள். ஆனாலும் அவன் பேசியதை எல்லோருடைய முன்னிலையிலும், குறிப்பாகத் தங்கையின் முன் மீண்டும் கேட்க அவள் மனம் ஒப்பவில்லை.

ரோஜா தங்கள் வீட்டிற்கு, தென்னரசு கடந்த மூன்று வருடங்களாக மல்லிகையின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து அன்னையின் அறைக்கு வருவதையும், தன் வாழ்க்கையில் நடந்த கசப்பை அன்னையிடம் சொல்லிச்சொல்லி கரைத்துக் கொண்டிருப்பதைப் பற்றியும் கூறினாள்.

‘‘முல்லை, என்னுடைய சந்தேகப்பேய்க்குக் காரணம் என் தாத்தாவின் வாழ்க்கையில் நடந்த செயல்தான். என் தாத்தா ஒரு ஜமீன்தாரிடம் லாயக்காரனாக வேலை செய்துகொண்டிருந்தார். என்

பாட்டி மிகவும் அழகாக இருப்பார்களாம். ஜமீன்தாரின் மகன் ஆசை வார்த்தை கூறி அவர்களைத் தன் வயப்படுத்திக்கொண்டான். பாட்டியுடன் தகாத உறவு கொண்டான். இதை தாத்தா ஒரு முறை நேருக்கு நேர் பார்த்தாலும் ஜமீன்தாரைப் பகைத்துகொண்டு அக்காலத்தில் வாழ முடியாதுஎன்பதால் மனைவியிடம் பேசியிருக்கிறார். பாட்டியோ மருந்தின் மயக்கத்தில் இருந்ததால், அவர்களை அப்படியே விட்டுவிட்டு, தாத்தா வேறு ஊருக்குச் சென்றுவிட்டார். இருந்தாலும் அவர் மனதில், குறிப்பாக ‘பெண்கள் நம்பிக்கை துரோகம் செய்பவர்கள். அவர்களை நம்பக்கூடாது. அவர்கள் எது செய்தாலும், அப்படியே அவர்கள் சொல்வதை நம்பி ஏற்றுக்கொள்ளக்கூடாது. சந்தேகத்துடனேயே பார்க்க வேண்டும்’ என்று சொல்லி சொல்லியே என் அப்பாவையும், சித்தப்பாவையும் வளர்த்திருக்கிறார். என் அம்மாவை அப்பா என்றுமே நம்பியதில்லை. எதைச் செய்தாலும், எப்படிச் செய்தாலும் குற்றம் காண்பார். தன் தம்பியின் முன்னால்கூட வரக்கூடாது என்றெல்லாம் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருந்தார். என்னிடமும் என் சகோதரர்களிடமும்கூட சிறு வயதிலிருந்தே ‘பெண்களை நம்பக்கூடாது. அவர்கள் மீது எப்பொழுதும் ஒரு கண் வைத்திருக்கவேண்டும்’ என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பார். அந்த வயதில் விவரம் புரியாவிட்டாலும், விஷயம் என்னவென்று தெரியாவிட்டாலும் அவர் சொன்னது மட்டும் மனதில் பதிந்துவிட்டது. அன்னையைத் தெரிந்த பிறகு என் வாழ்வின் நிகழ்வுகளைச் சமர்ப்பணம் செய்து கொண்டிருந்த சமயத்தில்தான், இரண்டு வருடங்களுக்கு முன் என் அப்பா இந்த விஷயத்தை என்னிடம் சொல்லிவிட்டு இறந்துபோனார். நான் விடுபட விரும்பினாலும், என் சந்தேகக் குணத்திலிருந்து விடுபட்டு, என்னால் முழுமையாக அன்னையிடம் சரணடைய இரண்டாண்டுகள் பிடித்தன. அதன்பின்தான் இன்றைக்கு உன்னைத் தைரியமாகச் சந்திக்க முடிந்தது. நான் செய்ததற்கு என்னை மன்னித்துவிடு’’ என்று மீண்டும் ஒரு முறை மன்னிப்புக் கேட்டான்.

‘‘அக்கா, எட்டு வருடக் கதையை பேச இன்னுமொரு எட்டு வருடங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள். உங்களுக்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். காலம் முழுவதும் இருவரும் பேசலாம். இப்பொழுது வெளியே வாருங்கள்’’ என்றழைத்தாள் மல்லிகை.



‘‘ரோஜாம்மா, முல்லையும் நானும் கல்லூரியில் படிக்கும்பொழுதே ஒருவரை ஒருவர் விரும்பினோம். முல்லையின் பெற்றோரும் படிப்பு முடிந்தவுடன் திருமணம் செய்ய ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இடையில் நடந்த விஷயங்கள் என் வாழ்க்கையை, திசை திருப்பிவிட்டது. அன்று நான் முல்லையை மணந்திருந்தால் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்திருப்போம். ஆனால் இன்று இருவருக்குமே அன்னையைத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், முல்லையால் தான் அன்னையை அறிந்திருக்கிறேன். அதனால் அவளை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளாமல் என் ‘ஆன்மாவின் தோழியாக’ ஏற்று, உடலளவில் உறவு கொள்ளாமல், தூய்மையான அன்னை வாழ்க்கையை முல்லையுடன் வாழ விரும்புகிறேன். என் சார்பில் நீங்கள்தான் அவளின் சம்மதத்தைப் பெற்றுத்தர வேண்டும். அதோடு மல்லிகையம்மாவும் எங்களுடனேயே இருக்க வேண்டும். ஒரு வகையில் என் தாய் என்றாலும், எங்கள் இருவரின் குழந்தையும் அவர்கள்தான்’’ என்றான்.

‘‘என்ன முல்லை, தென்னரசு சொன்னதைக் கேட்டாயல்லவா? உனக்குச் சம்மதம்தானே!’’

‘‘எனக்குப் பரிபூரண சம்மதம், ரோஜாக்கா. நானும் மல்லிகையைப் போல வாழவேண்டுமென அன்று மல்லிகை என்னுடன் பேசியதிலிருந்து அன்னையிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். என் ஆன்மாவின் துணையாக அரசை அன்னையே திருவுருமாற்றம் செய்து அனுப்பியிருக்கிறார். சந்தோஷமாக இருக்கிறது’’.

தன் பையிலிருந்த வைர மோதிரத்தையெடுத்து, வெள்ளொளி அறையெங்கும் அன்னையின் ஒளியாக வீச முல்லையின் விரலில் மாட்டினான். முல்லை தன் கையிலிருந்த அன்னையின் முத்திரை (symbol) மோதிரத்தை தென்னரசுவின் விரலில் போட, மல்லிகை அன்னைக்கு நன்றியைக் காணிக்கையாகச் செலுத்தினாள்.

***தொடரும்.....***

❀ ❀ ❀

## யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**94. முழுமையான திருவுருமாற்றம்.**

முழுப்பொய்க்கு உலகில் போக்கிடமில்லை.

ஆண்டவனும் உள்ளே நுழைய முடியாது.

அதற்கும் திருவுருமாற்றம் உண்டு.

மாறுவது அதன் பங்கு - மாற்றுவது இறைவன்.

**மாற முடிவு செய்துவிட்டால்**
**அது எவரும் எட்ட முடியாத முழுமெய்யாகும்.**

இதை, கிராமத்தில் கண்டோம்.

பணம் 100% தேதியோடு வந்துவிட்டது.

ஒருவர்கூட பணத்தை பாங்கில் கட்டாமல் வீடு சேரவில்லை.

மூட்டை கம்பு 20 ரூபாய். 4 மூட்டை பெரிய விளைச்சல் 100 ரூபாய் அதிக மகசூல். ரூ.100 என்பது 1½ இலட்சமாயிற்று. 1500 மடங்கு உயர்ந்தது.

எவ்வளவுக்கு எவ்வளவு பொய்யாக இருக்கிறதோ, அது மாறினால் அவ்வளவுக்கு அவ்வளவு பெருகும்.

10,000 ரூபாய் 2,40,000 ரூபாய் ஆனதை, 2000 ரூபாய் அப்படி மாற்றியதுஎனலாம். 2000 ரூபாய் 11 இலட்சமாயிற்று, 550 மடங்கு. அதையே '0' ரூபாய் 11 இலட்சம் ரூபாய் என்றால் 11 இலட்ச மடங்கு வளர்ந்ததுஎனலாம். இது கெட்ட எண்ணம் நல்ல எண்ணத்தின் சேவையால் பெற்றது.

உண்மைஎன்பது 00, infinity மடங்கு வளரும். நம் வாழ்வில் infinityயைப் பார்க்க முடிவதில்லை.

எது முக்கியம்?

மாறுவது முக்கியம்.

மாற எடுக்கும் முடிவு முக்கியம்.

ஏன் இந்தப் பெருக்கம்?

This is a JOY Brahman seeks.

This JOY is not there even in heaven now.

Therefore this infinite expansion.

பொய் பெற்ற வாய்ப்பு மெய்க்கில்லை.

பொய் மனம் ஒடிய வேண்டாம்.

இல்லையென்பது இங்கில்லை.

எவரும் வெறும் கையோடு போகவேண்டாம்.

I classம், III classம் ரயிலில் ஒரே வேகமாகப் போகும்.

Equality உண்டு, சுதந்திரம் உண்டு.

நாம் விரும்பி, அறிந்து, முனைந்து, பணிந்து ஏற்க வேண்டும்.

பொய்யும் மெய்யாகும் யோகம் பூரணயோகம்.

**95. பொறுக்க முடிந்தது, பொறுக்க முடியாதது, நினைக்கவே பயமானது.**

முடிந்ததை 1 மணியும், முடியாததை 1 நிமிஷமும், நினைக்கவே பயமானதை க்ஷணமும் ஏற்றால் இந்த 100 பயிற்சிகளில் பலன் பவித்திரமாகக் கிடைக்கும்.

விளக்கெண்ணெய், Cod liver oil காட்லிவர் ஆயில், புரியாத புத்தகம், மாமியார் கொடுமை, மருமகள் அட்டகாசம் பொறுக்க முடிந்தவை. கசப்பின்றி, அறிவால் இவை நம் பிரதிபலிப்புஎன ஏற்று 1 மணி நேரம் முகம் சுளிக்காமலிருப்பது பொறுமை.

அதிகாரி பலர் முன்னிலையில் நம்மைத் திட்டுவது, கீழேயுள்ள சிப்பந்தி எதிர்த்துப் பேசுவது, பிறர் உள்ள பொழுது அதிகாரிக்குத் திறமையில்லை எனப் பேசுவது பொறுக்க முடியாதவை. இவையெல்லாம் நாம் இதுவரை பிறருக்குச் செய்தன, மீண்டும் வருகின்றனஎன விளங்கிக்கொண்டு,

1 நிமிஷம் **மனம் கசங்காமல்**, நடக்க வேண்டியது நடக்கிறதுஎன உள்ளே மலர்வது அடுத்த கட்டம்.

பாம்பு உள்ள அறைக்குப் போவது, மகன் ஜெயிலுக்குப் போயிருக்கிறான் எனக் கேள்விப்படுவது, வெளியிலிருந்து உள்ளே வந்தால் தம்பதியுடன் படுக்கையில் வேறொருவரிருப்பது போன்றவை நினைக்கவே முடியாதது. நான் என் கூட்டாளிக்குப் பாம்பாக இருந்தேன், நண்பரிடம் கோபப்பட்டு அவர் மகன் ஜெயிலுக்குப் போக நினைத்தேன், உடந்தையாயிருந்தேன், நடத்தையில் நான் என்தம்பதி போன்றவனேஎன மனம் அறிந்து, உணர்ந்து, ஞானமாக மலர்வது. **நாம் மனதால் செய்தது மற்றவர் நமக்குச் செயலாகச் செய்கிறார்என்பது முக்கியம். நம்முடைய பங்கில்லாமல் நமக்கு நல்லதோ, கெட்டதோ வாராது**. கர்மத்திற்குக் கட்டுப்பட்டவருக்கு கடந்தது இல்லாமல் நிகழ்வது இருக்காது. அருளைப் பெறுபவர்க்கு கர்மமோ, கடந்ததோ தேவையில்லை. அருள் தானே, காரணமேயில்லாமல் செயல்படுவது; பிரமேயமில்லாமல் பிரம்மம் செயல்படுவதை அருள் எனவும்; திறமையோ, தகுதியோ, சந்தர்ப்பமோ, அவசியமோ, காரண-காரியமோ இல்லாமல் பெரும்பலனை நம்மேல் திணிப்பது பேரருள்.

- ❀ அருள் செயல்பட கர்மத்தை நம்பக்கூடாது.
- ❀ பேரருள்வர நம் திறமையை நம்பக்கூடாது.

நினைக்க பயமானதை, நம் பங்கினால் மனம் ஏற்றவுடன் பயங்கரமான நிகழ்ச்சி பவித்திரமாக மாறுவதைக் காணலாம். போலீஸ் இன்ஸ்பெக்டர், 4கான்ஸ்டபிள், விலங்குடன் நாம் வீடு திரும்பக் காத்திருப்பதை அது போல் மனம் ஏற்றால், இந்த நகரின் பாதுகாப்பைக் காப்பாற்றிய விருதை நமக்குச் சின்னமாக - விலங்கை - அளித்து மாலைபோடப்போவது தெரியும்.

## 96. உலகை, தன் மூலம் அறிந்து, அனுபவிப்பது மனித சுபாவம்.

உலகமே தன்னால் மட்டும் நடப்பதாக நினைப்பவருண்டு, பேசுபவருண்டு, நடிப்பவருண்டு. பிரம்மம் எந்த ஜீவனையும் தன் பாணியில் புரிந்து கொள்ளும், தன் சக்தியால் ஆளும், தன்ஆனந்தத்தால் அனுபவிக்கும், இது முடிவான தத்துவம்.



RTO ஆபீஸில் நமக்கு லைசென்ஸ் பெற்று வந்தால், நாம் லைசென்ஸ் பெறும் ஆபீஸ் இதுஎன அறிகிறோம். பாங்க் கடன் கொடுத்தால், பாங்க் கடன் தருமிடம்எனப் புரிகிறது. எனக்குக் கடன் கொடுக்காவிட்டால், எவருக்குமே கடன் தாராவிட்டால் பாங்க் இல்லை. அதனால் என்னால்தான் பாங்க் இருக்கிறது. என்னால்தான் RTO ஆபீஸ் இருக்கிறதுஎன்று பேசுபவருண்டு.

**பிரம்மம் தன் பாணியில் நம்மை அறிவதை, மனிதன் சுயநலமாக மாற்றி இதுபோல் பேசுகிறான்**. மனிதன் பேசுவது பிரம்ம பாஷை.

பிரம்மம் நம்மை அப்படிப் புரிந்துகொள்வதால், ஆட்சி செய்வதால், அனுபவிப்பதால் அது மாறுவதில்லை. பிரம்மத்தின் அனந்தத்தில் இந்த அனுபவம் கரைகிறது.

நாம் பெறும் லைசென்ஸ், கடன் நம்மை மாற்றுகிறது. அதுவே வித்தியாசம்.

கடன் பெறுவதால் நம் நிலை மாறாவிட்டால், லைசென்ஸ் பெறுவதால் நம் நிலை மாறாவிட்டால், நாம் பிரம்மமாவோம்.

நட்பும், உறவும் நம்மை மாற்றுகின்றன.

நட்பு, நட்பாக இருந்து, அதனால் நம்மனம் பாதிக்கப்படவில்லையெனில்; உறவு, சிறப்பான உறவாக இருந்து, உறவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் நாம் என்றும்போலிருந்தால், சித்திரத்திலலர்ந்த செந்தாமரையாக முகமிருந்தால், நாம் மனத்தால் பிரம்மமாகிவிட்டோம்எனப் பொருள்.

ஒருவரை ஜெயிப்பதால் உயராமல், அவரிடம் தோற்பதால் குறையாமல் இருப்பது பிரம்மத்தின் நிலை.

அந்த பிரம்மம் வாழ்வில் மலரும்பொழுது பிரம்மம் முழுமை பெறுகிறது.

மரம் மலர்வதால் ஆயிரம் விதையுண்டாகி ஆயிரம் மரம் முளைக்க முடியும்.

இது மரம் உடலால் மலர்வது.

மகாத்மா காந்திஜீ இந்த நாட்டில் தூசியான மனிதனை சுதந்திர வீரன் ஆக்கினார் *(out of dust he made us into men)*. அது உயிரால் மலர்வது.

ஒரு சீனுவாச இராமானுஜம் 1000 பேரை அவர்போல மாற்றுவது மனத்தால் மலர்வது.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் நம் ஆன்மாவில் மலர்ந்தால் பக்தன் ஸ்ரீ அரவிந்தராவான்.

அது ஆயிரம் பேரிலும் நடப்பது பிரம்மத்தின்முழுமை மனிதனில் மலர்வது.

அது பூரணபிரம்மம்.

பூரணம் நம்மில் பூரித்தெழுவது நாம் பூரணம் பெறுவது.

அதுவே வளரும் ஆன்மா, சைத்தியப்புருஷன்.

மனிதன் எந்தத் தவற்றைச் செய்தாலும், பாணி பிரம்மத்துடையது.

அதனால் உலகில் தீமையில்லை.

**97. உயிருக்குயிரானவரை நினைத்தால் உள்ளம் புளகாங்கிதமடைவதுபோல் உயிரை எடுப்பவரை நினைக்கும்பொழுது உள்ளம் புளகாங்கிதமடைய வேண்டும்.**

- இது எப்படி நடக்கும் என்பது கேள்வி.
- ஆதாயத்திற்காக இதைப் பலரும் செய்கின்றனர். அதை அன்புக்காகச் செய்வதே இம்முறை.
- வேலையும் போய், மானமும் போய், வருமானமும் போய், மனம் ஒடிந்து விரக்தியின் எல்லைக்கு அனுப்பியவரை மீண்டும் போய் சேர்ந்து கொண்டது ஓர் அனுபவம். இதில் மேலும் விசேஷம் என்னவென்றால் பிரியம் முன்பைவிட இப்பொழுது அதிகமாக இருக்கிறது.
- ஆதாயம் தேடும்பொழுது வெட்கம், மானம், சொரணையிருக்காது.

  ஆண்டவனை நாடும்பொழுதும் அவையிருக்கா.
- பழைய வெறுப்பெல்லாம் நாளாவட்டத்தில் புதிய பிரியமாக மாறுவது அனுபவம்.
- வெறுப்பானவரிடம் உள்ள ஒரு நல்ல குணத்தை முழுவதும் பாராட்டி புனிதமாக மனம் உணர்ந்தால், அது வளரும்பொழுது படிப்படியாக நிலை மாறும்.
- பழைய வெறுப்பு நினைவுக்கே வாராது. புதிய மனம் நறுமணமாக இருக்கும்.
- இம்மாற்றத்தை ஆதாயத்திற்காகச் செய்யாமல் ஆண்டவனை அனுபவிக்கச் செய்யலாம்.

  அதன் தத்துவத்தைப் படிக்கலாம்.

  படித்ததை, நன்றாகப் புரிய முயலவேண்டும்.

  புரிந்ததை மனம் ஏற்கவேண்டும்.

  ஏற்றது இனிக்கவேண்டும்.

  இனித்தது தன்னை இழந்து உடலை எட்டிப் புல்லரிப்பது முடிவு.
- அருணகிரிநாதர், விப்ர நாராயணர் இதுபோன்ற மாற்றம் பெற்றனர்.
- நமக்கும் இதுபோன்ற அனுபவம் இல்லாமலிருக்காது.
- அதை எடுத்து யோசனை செய்தால், யோசனை உணர்ச்சியாகும்.
- எதிரியுடன் சேர்ந்தால் எப்பொழுதும் ஆபத்து.

  ஆபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

  மனம்மாற, சம்மதிப்பது முக்கியம்.

  சம்மதித்தால், பிறகு மாறுவது கடினமில்லை.

  மாறக்கூடாதுஎன்ற முடிவுள்ளவருக்கு இது பயன்படாது.
- பிரான்சில் மனைவியுடனும், மனைவியின் காதலனுடனும் ஒரே வீட்டில் இருப்பார்கள்.

  அப்படிப்பட்ட வீட்டிற்கு பிரெஞ்சு மொழியில் சொல் உண்டு.

  அதேபோல் கணவனுடனும், அவன் காதலியுடனும் வாழ்கிறார்கள்.

  அதிகபட்ச சொரணையுள்ள இடத்தில் மனிதன் மாறியதற்கு இது அடையாளம்.

  அரசியலில் இந்த அனுபவம் உண்டு.

  இது ஆண்டவனுக்குரிய மனநிலை.

**98. The sunlit path is always open to us, எந்த நேரமும் முழுச்சந்தோஷம் உண்டு.**

சிறுகுழந்தையின் கள்ளமற்ற உள்ளம் மலர்ந்த புன்னகையுடையது.

வேண்டியவர் விஷயத்தில் நாம் இனிமையாக இருக்கிறோம்.

பிறர் கோணத்தில் நாம் அடுத்தவரைக் கண்டால் அனைவரும் வேண்டியவரே.

**அன்னைமூலமாகக் கண்டால் அனைவரும் இதமானவரே.**

நம்மை விட்டகன்றால், வேண்டாதவர் இருக்கமாட்டார்.

நிகழ்ச்சிகள் இருண்டும், பொருள்கள் தடையாகவுமுள்ளன.

நிகழ்ச்சியின் ஒளியைத் தொட்டு, அதன்மூலம் உலகை நோக்கினால் உலகம் இருளாகத் தோன்றாது; ஒளிமயமாக இருக்கும்.

ஜடமான பொருளின் ஒளி, உலகை விஸ்வரூப தரிசனமாகக் காட்டும்.

மடையன் எப்படி ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்கிறான்என்பது, நமக்கு மடையனின் ஒளியை எட்டுவதாகும்.

திருடனின் நோக்கம் திருவுருமாற்றத்திற்குரிய நோக்கம்.

மடையனிலும், திருடனிலும், விபசாரியிலும் அன்னையின் நோக்கம் பரிணாம இலட்சியம்.

எதிரி நம் வாழ்வை சிறப்பாக்கும் கருவிஎன்று உணர்ந்தால், நமக்கு எதிரியில்லை.

சிறுகுழந்தைக்கு எதிரியில்லை.

மனம் எந்த வயதிலும் சிறுகுழந்தையாக இருக்க முடியும்.

அன்னையின் இலட்சியம் புரிந்தால், அனைவர் முகமும் நம்மை நோக்கி மலரும்.

**சிருஷ்டியைப் பரிணாமமாக்குவது அன்னை இலட்சியம்.**
**ஆயிரம் ஆண்டை ½ நிமிஷமாக்குவது இறைவன் வரும் தருணம்.**

அன்றாட வாழ்வில் 7 அஞ்ஞானத்தைக் கைவிட முயன்றால் sunlit path ஒளிமயமான பாதை தெரியும்.

கெட்டது போய், நல்லது வந்து, நல்லது போய் வாழ்வு எழுந்து, வாழ்வு தெய்வீக வாழ்வாவது ஒளிமயமான பாதை.

எந்த நேரமும் ஓர் அடி அப்பாதையை நோக்கி எடுத்து வைக்க முடியும்.

Sunlit path அப்பாதை நெடியது. நமக்குரிய இடத்தில் நாம் சேரலாம்.

Non-reaction, no initiation எரிச்சல்படாமல், எதுவும் செய்ய முயலாமல் இருப்பது அவ்வழி.



## 99. ஆபத்து - அரிய வாய்ப்பு.

அன்பர்கள் வாழ்வில் ஆபத்தின் சுவடு தானேஎழுந்ததாக 50 ஆண்டில் நான் கண்டதில்லை. அது அடிக்கடி வருவதைப் பிறர் வாழ்விலும், என் சொந்த அனுபவத்திலும் நான் அதிகமாகக் கண்டுள்ளேன்.

அரிய வாய்ப்புகள் வாராதவரேயில்லை; பெற்றவர் எவரும் இல்லை.

அரிய வாய்ப்புகள், பெரிய வாய்ப்புகள், நல்ல வாய்ப்புகள், இனிய வாய்ப்புகளை அன்பர்கள் அறிவதில்லை; பெறுவதில்லை; தெரிந்து கொள்வதில்லை. மிகச்சிறிய வாய்ப்புகளையே அன்பர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இதுவே என் அனுபவம். ஆபத்தின் சுவடுகள், ஆபத்தின் சூழல், சிறிய விபத்து, பெரியவை வந்ததேயில்லை. ஒரே ஒரு முறையும் அவை அன்பர்கள் வாழ்விலோ, என் வாழ்விலோ வந்ததில்லை. ஏன் அவை வருகின்றன?

அவை வருமுன் பல நாட்களுக்குமுன் எழும் அறிகுறிகளை நாம் பொருட்படுத்துவதில்லை. ஏன் அவ்வறிகுறிகள் எழுகின்றன? காரணம் இரண்டு வகை. உயர்ந்த வாழ்வுக்கு எதிரான குணம், செயல், attitude, நோக்கம், initiative, நாமே விரும்பிச் செய்வது போன்றவற்றை நம்மால் விடமுடிவதில்லை. நாம் அவற்றை அறவே விட்டபின் அதுபோன்ற உறவு, நட்பை விடமுடிவதில்லை. இந்த நிலையிலும் முன்கூட்டி எழும் எச்சரிக்கைகளைக் கவனித்தால், அவற்றை விலக்கலாம். ஏதோ ஒரு நேரம் விழித்துக்கொள்பவருண்டு. அவர் செய்யக்கூடியது என்ன?

அப்படி விழித்த நேரம் வேண்டாத குணத்தை, வேண்டாத உறவை மனத்திலிருந்து எடுத்துவிட்டு அன்னையை அழைத்தால், அழைக்க முடியவில்லைஎனத் தெரியும். வாயால் சொல்வதை - அவற்றை விடுவதை - மனத்தால் ஏற்காமல் அழைத்தால் அழைப்பு எழாது. மனம் தெளிவாக எரிச்சல், அல்பமான செயல்கள், அதிகாரம் செய்வது போன்றவற்றை விட முடிவுசெய்தது உண்மையானால் அழைக்க முடியும். அழைப்பு ½ மணியிலும் பலன் தரும், 2 நாளிலும் தரும். மனம் அவற்றிலிருந்து விலகியதன் உண்மையைப்பொருத்து நேரம் தேவைப்படும்.

**பலனில்லை என்பதேயில்லை.**
**நேரம் நம்மைப்பொருத்தது.**

மேற்சொன்ன சந்தர்ப்பங்களை 'எங்கள் குடும்பத்தில்' ஒரு 50 அல்லது 100 முறை வீட்டு நிலைமையில் பொருத்தி விளக்கியுள்ளேன். இரண்டாம் பாகத்தில் அப்படிப்பட்ட ஒவ்வொரு வரியையும் எடுத்து 1 பக்கத்தில் பலவாறாகவும் விளக்கியுள்ளேன்.

- ❀ ஆபத்து நமக்கில்லை.
- ❀ தொடர்ந்த அரிய வாய்ப்பு நம் பிறப்புரிமை.
- ❀ தீராத பிரச்சினையில்லை, தீர்க்காதவையுண்டு.
- ❀ வாராத வாய்ப்பில்லை, பெறாதவை ஏராளம்.
- ❀ அன்னையை அறிவது பாக்கியம், பெறுவது பேரருள்.

**100. முடியாது என உலகம் முடிவு செய்தது முடியும்எனக் கூறும் முறை.**

உலகம் நினைத்துப் பார்க்காததைச் சாதிக்கும் யோகம் இது.

சத்தியஜீவன் பிறப்பான்; உலகில் தீமையழியும்; காண்பவையெல்லாம் அற்புதமாக இருக்கும் என நினைத்தவரில்லை, பேசியவரில்லை.

பூலோகம் சுவர்க்கமாக வேண்டும் என்றவர், மேலே போய் சுவர்க்கத்தை அனைவரும் அனுபவிக்க நினைத்தனர்; நாம் வாழும் இவ்வுலகமே சுவர்க்க லோகமாகும் எனக் கூறவில்லை. அவர்கள் தீமையற்ற உலகை நாம் நாடவேண்டும்என நினைத்தனர். பகவான் தீமை அற்புதமாக மாறும் என்கிறார்.

முடியாதது முடியும் எனில் அதைச் சாதிக்க முடியும் என்பவற்றைக் கைவிட்டு முடியாததை முடிக்க முன்வரவேண்டும்.

சாவித்திரி எமனை வென்றாள். வென்றாள் எனில் எமனை அழித்தாள்.

நாம் நம்மனத்துள் உள்ள இருளை அழிக்கவேண்டும் - அதுவே முறை.

மோட்சம் தவசி பெறுவது.

யோகம் உலகம் முழுவதும் திருவுருமாறச் செய்வது.

யோக இலட்சியம் அவ்வளவு பெரியது என்பதால் யோகசக்தி வாழ்வில் பலித்தால் இதுவரை உலகம் உச்சக்கட்டமாகச் சாதித்தது நமக்குப் பலிக்கும்.



- ❀ **பலனைக் கருதாது, முறையைக் கருதுவது முறை.**
- ❀ **முறையைக் கருதாமல் மூலத்தைக் கருதுவது சிறந்தது.**
- ❀ **மூலத்தையும் மறந்து அன்னை என் சரணாகதியை ஏற்க வேண்டும் என ஜீவன் விழைந்து, பூரித்து, மலர்ந்து சிறப்பது.**
- ❀ **அன்னை முடிவு, அவரையடைய சரணாகதியே முடிவு; எனக்கென்று எதுவுமில்லை. வெற்றியுமில்லை, தோல்வியுமில்லை.**
- ❀ **நாம் தேடுவது ஆத்மா இல்லை. உடலிலும், வாழ்விலும், மனத்திலும் தோன்றி, மலர்ந்து, பூக்கும் ஆத்மா - சைத்தியப்புருஷன்.**
- ❀ **நாம் நம்மை மறந்த பிரம்மம்என நினைவுகூர்ந்து, மறந்ததை மீண்டும் அடைவது பரிணாமம்.**
- ❀ **பிரம்மத்திலெழுந்த சிருஷ்டி பரிணாமம் மூலம் பிரம்மத்தையடைய வேண்டும்.**
- ❀ **பிரம்மம் அது தேடும் ஆனந்தத்தை நம் வாழ்வில் நாம் காண்பது நம் யோகவாழ்வாகும்.**
- ❀ **யோகமே வாழ்வு; வாழ்வே யோகம்.**

**இம்முறை யோகவாழ்க்கையாகும்.**

*முற்றும்*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்தக் கரணமும் தன்னைத் தானே அடக்க முடியாது. உயர்ந்த கரணம் எளிதில் அதை அடக்கும். சுயக்கட்டுப்பாடு தன்னையறியும் அளவைப் பொருத்தது.

***பெரியதற்கு சிறியது பணியும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் சிலரைச் சோம்பேறிகள் எனவும், மற்றவரைச் சுறுசுறுப்பு உள்ளவர் எனவும் அறிவோம். அவரவர்கள் கண்ணோட்டத்தில் மனிதர்கள் செயல்களைக் கவனமாகப் பார்த்தால், தங்களுக்கு முக்கியமானவற்றில், ஆர்வம் உள்ள விஷயத்தில் முழுச் சோம்பேறிகள் உட்பட அனைவரும் தீவிரமாகவும், கவனமாகவும், சுறுசுறுப்பாகவும் எதையும் தவறாமல் நாடுகிறார்கள் என்பது தெரியும். பெருந்தலைவரும், உபயோகமில்லாதவனும் இந்தக் கண்ணோட்டத்தில் சமம் என்று தெரியும். இதை அறிவது விவேகம். இதுவே பிரம்மஞானம்.

***சுறுசுறுப்பான சோம்பேறி.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**இறைவனின் செயலை ஸ்பர்சிக்கும்**

**சைத்திய புருஷனின் உணர்வு, நன்றியாகும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

## Life Response

வில்லியம் தாக்கரே பிரபல ஆங்கில ஆசிரியர். சார்லோட் பிராண்டே என்பவரும் அவர்தம் இருசகோதரிகளும் பிரபலமான கதைகளை எழுதியவர்கள். இவர்களுள் சார்லோட், தாக்கரேயை குருவாக ஏற்றவர். அவர் பல கதைகள் எழுதினார். அதில் சிறப்பான கதையை தாக்கரேவுக்கு சமர்ப்பணம் செய்ய முடிவு செய்தார். அக்கதை,

> ஜேன் என்ற அனாதைப்பெண் கொடுமையான பள்ளியில் படிப்பை முடித்து ஒரு ஜமீன்தார் வீட்டில் Governess வீட்டோடு ஆசிரியை ஆனாள். ஜமீன்தாருக்கு மனைவியில்லை. ஜேனுடன் பழகினார். மற்றவர்கள் ஜேனை எச்சரித்தனர். நடக்காத விஷயத்தில் ஈடுபடாதே என்றனர். ஜமீன்தார் உள்ளன்புடன் ஜேனை ஏற்றார். திருமணம் நிச்சயமாகி, சர்ச்க்குப் போனார்கள். திருமணம் பாதியில் நடந்து கொண்டிருக்கும்பொழுது வக்கீல் திருமணத்தைத் தடை செய்தார். ஜமீன்தாரின் முதல் மனைவி பைத்தியமாக வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதால் அடுத்த திருமணத்திற்கு சட்டம் தடை செய்யும்.

இக்கதை அளவு கடந்து பிரபலமாயிற்று. சார்லோட் இக்கதையை தாக்கரேவுக்கு சமர்ப்பணம் செய்து முதல் பிரதி அனுப்பினார். அவரும் வாழ்த்தினார்.

தாக்கரேயின் மனைவி பைத்தியமாகி, அறையில் அடைக்கப்பட்டிருப்பது சார்லோட்டிற்குத் தெரியாது. தாக்கரேயின் நிலை Life Responseஆக சார்லோட்டின் கதையைப் பெற்றது!

❀❀❀

## தலைமைப் பதவி

ஜனாதிபதி நாட்டின் தலைவர். ஆனால் நாட்டின் முக்கிய அதிகாரம் திரைமறைவில் செயல்படுபவர்களின் கையிலிருப்பது வழக்கம். இன்று அமெரிக்க சர்க்கார் அதிகாரம் அதுபோல் 20 பேர் கையிலிருப்பதாகக் கூறுகிறார்கள்.

அமெரிக்கா போரில் இறங்கியது. உணவு உற்பத்தி முக்கியம். கோதுமைராஜாஎனப் பெயர் பெற்றவர் காம்பெல். சர்க்காரை அணுகி கோதுமையை அபரிமிதமாக உற்பத்தி செய்ய உதவி கேட்டார். சர்க்கார் மறுத்துவிட்டது. J.P. Morgan மார்கன் என்பவர் பாங்கு உரிமையாளர். அவரை அணுகி அதே கோரிக்கையை வைத்தார். 7 நிமிடத்தில் அவர் கேட்ட இரண்டு மில்லியன் டாலர்களை பாங்க் அவருக்கு சாங்ஷன் செய்தது.

> நேரம், காலம், யார், எவர்என அறிந்து க்ஷணத்தில் செயல்படுவது தலைமையின் தகுதி.
>
> இவர் தகப்பனார் 1907இல் அமெரிக்கப் பொருளாதாரம் நொறுங்கியதை ஒன்றரை நாளில் பாங்குகளையும், கம்பனிகளையும் சந்தித்து சர்க்காரிடமிருந்து $25 மில்லியன் பெற்றுத் தடுத்தார்.

**தலைமைக்குத் தகுதியுண்டு.**
**அத்தகுதி ஒருபோதும் தவறாது, தவறியதில்லை.**
**தவறாத தகுதி தலைமை.**

❀❀❀

September 2008 Jiviyam 14 Malar 5
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம்** (பாகம் 2) ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-

*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-

**(CONCISE TRUISMS)**

**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191